Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது மாசி 13 ஆம் நாள் றம்ழான் பிறை 29 (25-2-63) திங்கட்கிழமை இதழ் 17

யாம்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணடி விற்பனையாளரும்
45,மெயின்வீதி, : யாழ்ப்பாணம்

# "கவர்னர் ஜெனரலை பகிஷ்கரிப்போம்"

## சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னமே அவர்"

### யாழ்ப்பாணம் விஜயம் பற்றி தமிழரசுக் கட்சி முடிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

கவர்னர்ஜெனரல் கௌரவ வில்லியம் கோபல்லாவ யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும்போது அவருக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி எதிர்ப்புத்தெரிவிக்க விருக்கிறது. தலைவர் திரு. எஸ். எம்- இராசமாணிக்கம் தலைமையில் இரு தினங்கள் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இந்த விஷயம் உட்படமேலும் பலவிஷயங்கள் ஆராயப்பட்டு முடிவுசெய்யப்பட்டது.

அரசாங்க அதிபருக்குப் பின்வரும் திர்மானம் அனுப்பி வைப்பதற்காக தயாரிக்கப் பட்டுள்ளது.

"கொள்கையளவில் மகாதேசாதிபதி கட்சிக்குச் சேராதவராகவும், இராணியின் பிரதிநிதியாகவும் இருந்தாலும், உண்மையில் அவரை தமிழ்மக்களை அழிக்க முயலும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னமாகக் கொள்ளவேண்டும். ஆகையால் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் செயற்குழு தமிழ்ப்பேசும் பிரதேசமான யாழ்ப்பாணத்திற்கு அவர் வருவதை, சிங்களமற்ற மந்திரிமார் வருவதை எதிர்ப்பது போலவே எதிர்ப்பதுடன் பகிஷ்கரிக்கவும் செய்யும்.

தமிழ்மக்கள் இப்போ[illegible] இருக்கும் நிலைமையில் தொடர்ந்து இருக்கும் காலம்வரை எதிர்க்க வேண்டுமெனத் தீர்மானித்துள்ளோம்."

#### அடுத்த நடவடிக்கை

தமிழரசுக் கட்சியின் அடுத்த நடவடிக்கை என்ன என்பதனை ஆராய தமிழரசுக் கட்சிச் செயற்குழுக்கூட்டம் அடுத்த மாதம் 16, 17 திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெறுமெனத் தெரிகிறது.

இக்கூட்டத்திலேதான் நேரடி நடவடிக்கைபற்றி ஆராய்ந்து இறுதி முடிவுசெய்வர் என்றும் அறியப்படுகிறது.

## சைவாசிரிய கலாசாலைப் பிரச்னை நீதிமன்றம் செல்லும்?

யாழ்ப்பாணம், திங்கள்

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை மூடப்பட்டதனைத் தொடர்ந்து தற்போது புதியதோர் பிரச்னை உருவாகியுள்ளது.

சைவாசிரிய கலாசாலையின் உரிமை யாருக்கு என்ற விஷயத்திலேயே பிரச்னை தோன்றியுள்ளது. சைவாசிரிய கலாசாலை தமக்கே உரியது என்று கல்விப் பகுதியினரும், அவர்களுக்கு உரிமையில்லை எமக்கே உரிமை என்று சைவ வித்தியா விருத்திச் சங்கமும் உரிமை கொண்டாடுகின்றன.

சைவ வித்தியா விருத்திச் சங்கம் அட்டர்ணி ஜெனரல், கல்வியமைச்சர், கல்வி இலாகா அதிகாரி ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாணம் கோர்ட்டில் வழக்குத் தாக்கல்செய்ய விருக்கின்றது. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை அரசாங்கத்தால் கையேற்கப்படு முன்னர் மூடப்பட்டுவிட்டது என சைவவித்தியா விருத்திச் சங்கம் அறிவித்துள்ளது. கலாசாலையை மூடியபின் அக்கலாசாலையில் உரிமை கொண்டாடுவது விந்தையாக இருப்பதாக சைவவித்தியாவிருத்திச் சபைப்பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## கிளைடர் பயிற்சி: நேரு வற்புறுத்து

புதுடில்லி, பெப். 24

சமாதான காலத்திலும் போர்க் காலத்திலும் கிளைடர் விமானங்களை ஓட்டும் பயிற்சி சிறந்த ஓர் விளையாட்டென பிரதமர் நேரு கூறினர். ஒவ்வொருவரும் கிளைடர் விமானம் செலுத்தும் பயிற்சி பெற்றிருக்கவேண்டும் என்றும், பெண்களும் இத்துறையில் பயிற்சி பெற்றுவருவது மகிழ்ச்சியளித்துவருவதாயும் அவர் கூறினர்.

## எம். பி. வீட்டின்முன் விபத்து; ஒருவர்மரணம்; மற்றொருவர்காயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சாவகச்சேரியில்கோர்ட் முதலியாராக கடமையாற்றும் அருணாசலம்கனகரத்தினம்என்பவர்செலுத்தி வந்தமோட்டார் சையிக்கிளும் தனிப்பட்டவர் ஒருவரின் ஜீப் வண்டியும் மோதிக் கொண்டதனல் கனகரத்தினம் காலமானர்.

இச்சம்பவம் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் வீட்டிற்கு அருகில் நிகழ்ந்தது. மோட்டார் சையிக்கிளின் பின்பக்கமிருந்த எஸ். தங்கராசா என்பவரும் காயமடைந்தார். இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கனகரத்தினம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரும்வழியில் காலமானர். சாவகச்சேரிப்பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர். சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குச் சென்று காயமடைந்தவரையும் காலஞ்சென்றவரையும் பார்வையிட்டார்.

சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் ஏ. வைத்திலிங்கம் மரணவிசாரணை நடத்தினர்.

## பர்மிய வங்கிகளுக்கு 3 மாதத்தில் நஷ்டஈடு

ரங்கூன், பெப். 24

பர்மாவில் தேசிய மயமாக்கப்பட்ட 14 வெளிநாட்டு வங்கிகளுக்கும், 10 பர்மிய வங்கிகளுக்கும் பங்குப்பணமும், நஷ்டஈடும் 3 மாதங்களில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. தனிப்பட்ட வங்கிகள் 43 சதவிகிதம் லாபம் சம்பாதிக்கின்றதென்றும் இதை அனுமதிக்கக்கூடாது என்றும், அரசா[illegible] கூறியது.

பர்மிய உள்நாட்டு மந்திரி தலைமையில் வங்கி தேசியமய சபை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

## ஐ. அ. குடியரசு தூதுகோஷ்டி

புதுடில்லி, பெப். 14

இந்திய அரசாங்கத்தின் அழைப்பிற்கிணங்க, ஐக்கிய அராபியக் குடியரசிலிருந்து கல்வித்துறை பிரதிநிதிகள் தூதுகோஷ்டி ஒன்று அடுத்த மாதம் இந்தியாவந்து, 10 நாள் சுற்றுப்பிரயாணம் செய்யும்.

## சீன-பாக். ஒப்பந்தம்

### டீன்றஸ்க் கவலை

வாஷிங்டன், பெப். 24

சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் பொருட்டு பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜனுப் புட்டோ பீக்கிங் செல்வது குறித்து அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன்றஸ்க் கவலைதெரிவித்துள்ளார்.

சீனவும் பாகிஸ்தானும் இச்சமயத்தில் எல்லை ஒப்பந்தம் கைச்சாத்திடுவது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு[illegible]யில் காஷ்மீர் பிரச்சனை சம்ப[illegible] நடைபெற்று வரும் பே[illegible]ர்த்தைகளைப் பாதிக்கப் பட[illegible]மென்று அமெரிக்க வட்[illegible]கள் கவலை தெரிவிக்கின்[illegible]

## கியூபா ஆட்சேபனை

ஹவானா, பெப். 24

கியூபா கடற்பகுதிக்குள் அமெரிக்க கப்பல்கள் பிரவேசித்திருப்பதாய் கியூபாகுற்றஞ்சாட்டியிருக்கிறது. ஆனல் இதுபற்றி கருத்துதெரிவிக்க அமெரிக்கா மறுத்துவிட்டது. காஸ்ட்ரோ விரோதிகள், கியூபாவுக்கெதிராக நடவடிக்கை எடுக்க, பகாமாஸ்தீவு உபயோகிக்கப்படுவதாய் கியூபா, பிரிட்டனிடமும் ஆட்சேபித்திருக்கிறது.

## ஈராக்கின் எச்சரிக்கை

பாக்தாத், பெப். 24

ஈராக் வெளிநாட்டு மந்திரி சோஷலிச நாடுகளுக்கு எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். ஈராக் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக்கூடாதென்றும், அண்மையில் ஏற்பட்ட புரட்சிபற்றி கண்டனம் தெரிவிக்கக்கூடாது என்றும் சோஷலிஷ நாடுகளுக்கு அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம், திங்கள்

கைதடியில் ஒரு லொறி ஒன்றரை வயதுக்குழந்தை மீது மோதியது. குழந்தை ஸ்தலத்தில் மரணமடைந்து விட்டது. இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் விசாரணை நடத்தினர்.

## கட்டுப்பாடுதளராது

புதுடில்லி, பெப். 24

தங்கக்கட்டுப்பாடு விதிகளை அரசாங்கம் ஒருபோதும் தளர்த்தாதுஎன நிதிமந்திரி தேசாய் அறிவித்தார்.

## 'சோமு'வின் நூலுக்குப் பரிசு

புதுடில்லி, பெப். 24

இந்திய சாகித்திய அகாடமி 1962-ம்வருடத்தில் சிறந்த நூல்கள்தெரிவில்தமிழில் மீ.ப.சோமசுந்தரம் ('சோமு') எழுதிய "அக்கரைச் சீமையிலே" என்ற நூலைத் தெரிந்தெடுத்துள்ளது. மொத்தம் 8 மொழிகளில் எழுதப்பட்ட நூல்களை பரிசுக்குரியவையென அகாடமி தெரிவு செய்துள்ளது.

அடுத்த 31-ம் திகதி இந் நூல்களுக்கான பரிசுகள் வழங்கப்படும். இப்பரிசுக்கான 5000 ரூபாய் தேசிய பாதுகாப்புப் பத்திரமாய்8 ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும்.

## இடைத்தேர்தல்

நாவற்குழி, திங்கள்

கைதடி—நாவற்குழி 11-ம் வட்டார கிராமசபை இடைத்தேர்தல் எதிர்வரும் 27-ம் திகதி நடைபெறவிருக்கிறது. திருவாளர்கள் வீ. கதிரவேலு, பொ. கணபதிப்பிள்ளை ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

## காணி எடுத்தற் சட்டம் (460-ம் அத்தியாயம்)

### 7ம் பிரிவின்படியான அறிவித்தல்

கீழ்க்காணும் அட்டவணையின்விபரிக்கப் பட்ட காணிகளை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. இது சம்பந்தப் பட்ட விசாரணை 1963-ம் ஆண்டு சித்திரை மாதம் 24-ந் திகதி முற்பகல் 10 மணிக்கு கிராமமுன்னேற்றச் சங்கம், செட்டிக்குளத்தில் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு 1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானி(பகுதி III) இல. 13529த்தில் பார்க்கவும்.

அட்டவணை

கிராமத்தின் பெயர்: முதலியாகுளம்.
காரியாதிகாரியின் பிரிவு: வவுனியா தெற்கு (தமிழ்) பிரிவு.
காணியின் பெயர்: கீழ்க்காடு, வெந்த காட்டு வயல்.
படம்: பி. பி. 19.

ஒப்பம்: செ. பொஸ்ரர்
அரசாங்க அதிபருக்காக,
வவுனியா.

---

## (460ம் அத்தியாயக்) காணி எடுத்தற் சட்டத்தின் 7ம் பிரிவின்படியான அறிவித்தல்

குறிப்பு இல. : எல். எச்/ஏ. 5009.
கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப் பட்டிருக்கும் காணியைப் பொதுத் தேவையொன்றிற்கென எடுத்துக் கொள்ள எண்ணியிருக்கப்படுகின்றது. மேலதிக விபரங்களுக்கு, கயவு செய்து 22-2-63ம் திகதியின் 13,529-ம்இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

அட்டவணை

காணிப்பெயர்: மிரிஸ்வத்தை;
கிராமப் பெயர்: மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை, தோட்டமுனை, மஹவில்லக் கிராமம்;
துண்டு, பட இல. : பீ. பீ. ஏ. 5, 061 இல் துண்டு 1.

ஆர். பாஸ்கரலிங்கம்
களுத்துறை மாவட்ட உதவி அரசாங்க அதிபரும், காணி எடுத்துக் கொள்ளுமதிகாரியும்.

---

எனது இல. எல். ஏ. 3827 இலங்கைச் சட்டக்கோவையின் 460-ம் அத்தியாயமான காணி கொள்ளும் சட்டத்தின் 7-ம் பிரிவின் கீழ் உள்ள அறிவித்தல்.

கீழ் காட்டிய அட்டவணையில் உள்ள காணியை எடுத்தற்கு உத்தேசித்திருக்கிறது. முழு விபரங்களும் 22-2-63 திகதியின் இலக்கம் 13,529 கொண்ட அரசாங்க கசற் பத்திரிக்கை பாகம் iii பார்க்கவும்.

அட்டவணை

கிராமத்தின் பெயர்: உடப்பு தெற்கு.
பிரிவுக் காரியாதிகாரியின் பகுதி: பிற்றிக்கால் கோறளை வடக்கு.
காணியின் பெயர்: தண்ணித்துறை.
லொட்: 1 பீ. பீ. ஏ. 1777.

ஒப்பம்: பி. ஜி. புஞ்சிகேவா
அரசாங்க உதவி அதிபா,
புத்தளம் டிஸ்திறிக்.

---

## தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணாநந்தர்
கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

## கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

வல்வெட்டித்துறை திருவில் விளையாட்டுக் கழகத்தினர் வருடா வருடம் நடாத்தி வரும் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை அடுத்தமாதம் முற்பகுதியில் நடத்தவிருக்கின்றனர்.

இக்கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கோஷ்டிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப கடைசித் திகதி இம் மாதம் 28-ந் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, நெல்லியடி, உடுப்பிட்டி, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் உள்ள பிரபல விளையாட்டுக்கழகங்கள் இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளவிருக்கின்றன. சாம்பியனைத் தெரிவு செய்யப்படும் கோஷ்டிக்கு திரு. தா. சி. நா. சிவசுப்பிரமணியம் அளிக்கும் சலேஞ் வெற்றிக்கிண்ணமும், விளையாட்டுக் கழகத்தினரின் வெற்றிக் கிண்ணமும் பரிசாக வழங்கப்படும். இரண்டாமிடத்தைப் பெறும் கோஷ்டிக்கு திரு. அ. துரைராஜா அளிக்கும் வெற்றிக்கிண்ணமும் பரிசாக வழங்கப்படும்.

---

இலங்கையிலிருந்து

# 10 லட்சம் ருத்தல் தேயிலையை பாகிஸ்தான் வாங்கும்

கொழும்பு, சனி

இவ்வருடத்தில் பத்து லட்சம் ருத்தல் தேயிலையை பாகிஸ்தான் இலங்கையிலிருந்து வாங்குமென்றும். இலங்கை 20,000 தொன் அரிசியும் 4,000 தொன் உருளைக் கிழங்கும் பாகிஸ்தானிலிருந்து வாங்குமென்றும் இலங்கை—பாகிஸ்தான் வர்த்தக கூட்டறிக்கையொன்றில் தெரிவிக்கப்படடுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற பாகிஸ்தான்—இலங்கை வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் இன்று முடிவடைந்த பின்னர் வர்த்தக உணவு, கப்பல் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்னவும், பாகிஸ்தான் வர்த்தக மந்திரி ஜனப் வாஹித துஸ்மானும் வெளியிட்ட கூட்டறிக்கையில் மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்துடன் வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் நடத்தும் பொருட்டு இங்கு வந்த பாகிஸ்தான் தூது கோஷ்டி நாளை கராச்சி திரும்பும்.

இருநாடுகளுக்குமிடையேயான வர்த்தக முன்னேற்றம் சம்பந்தமாக இருதரப்பினரும் பரிசீலனை செய்தனர். பாகிஸ்தானிலிருந்து கருவாடு இறக்குமதி செய்வது சம்பந்தமாகவும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

---

## சாராயத் தவறணைகள் ஒழிக்கப்படலாம்

கொழும்பு, ஞாயிறு

உள்நாட்டுக் கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா கொண்டுவந்திருக்கும் புதிய தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் சாராயத்தவறணைகள் நாட்டில் இருக்கமாட்டாது. இனிமேல் நாட்டில் தவறணைகள் எதுவும் இருக்கக்கூடாதென்றும், சாராய விற்பனை நிலையங்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்றும் அங்குசாராயம் விற்கப்படுமே தவிர எவரும் அதை அருந்துவதற்கு அனுமதிக்கக்கூடாதென்றும் மந்திரி புதிய ஆலோசனை ஒன்றைத் தெரிவித்திருக்கிறார். மந்திரியின் சிபார்சின்படி விற்பனவு நிலையங்களில் ஒருவருக்கு இரண்டு போத்தல் சாராயமே வழங்கமுடியும்.

கசிப்புத் தொல்லையைத் தவிர்க்கும்பொருட்டு வரண்ட பிரதேசங்களில் தவறணைகளை நிறுவுவதானல் வாக்கெடுப்பின் மூலம் நிறுவலாம் எனவும் மந்திரி சிபார்சு செய்துள்ளார். கசிப்புத் தொல்லையைத் தீர்க்கும்பொருட்டு ஒரு விசேடகிளை ஒன்று நிறுவப்படவேண்டும் என்றும் மந்திரி தெரிவித்துள்ளார். இப்படி ஒரு கிளை நிறுவப்பட்டால், பொலிஸார், கலால்பகுதி ஆகியவற்றின் உதவியோடு உள்நாட்டமைச்சு வெற்றிகரமாக உழைக்கலாம் என மந்திரி கருதுகிறார்.

---

## சிவராத்திரி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்திலுள்ள திவ்ய ஜீவன சங்கத்தினர் சென்ற வெள்ளிக்கிழமை சிவராத்திரி விழாவை முன்னிட்டு கைதடி வயோதிபர் விடுதிச்சாலையில் கூட்டுப்பிரார்த்தனை நடத்தினர். அத்தியடி சித்திவிநாயகர் கோவிலிலும் சங்கத்தினர் கூட்டுப்பிரார்த்தனையில் பல சிறுவர்கள் கலந்துகொண்டனர்.

அத்தியடி சித்திவிநாயகர் கோவிலிலிருந்து மேற்படி சங்கத்தினர் நடாத்திய நடை பஜனைக் கோஷ்டியில் ஆண்களும் பெண்களும் சிறுவர்களும்பங்கு கொண்டனர்.

---

## பலாலி டிப்போ இடமாற்றம்

### சனசமூக நிலையம் கோரிக்கை

மாவிட்டபுரம், ஞாயிறு

இ. போ. ச. வின் மல்லாகம் டிப்போவை யாழ்ப்பாணத்திற்கு மாற்றஞ்செய்திருப்பது பொது ஜனங்களுக்கு அசௌகரியத்தை உண்டாக்குவதெனவும், குடாநாட்டிற்கு நடுவேயுள்ள மல்லாகத்தில் இ. போ. ச. நிலையம் இருப்பதே இ. போ. ச. சேவைக்குப் பயனுள்ளதாயிருக்குமென்றும் ஆகையால் மறுபடியும் இந்த நிலையம் மல்லாகத்தில் இயங்கும்படி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மேலதிகாரிகள் உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றினை மல்லாகம் சனசமூக நிலையம் நிறைவேற்றியுள்ளது.

திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில்நடைபெற்ற ஆண்டுக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. நம. சிவப்பிரகாசம், உப-தலைவர் திரு. ஆ. சிவசம்பு, செயலாளர் திரு. சி. அகிலேஸ்வரன், பொருளாளர் திரு. சு. சுந்தரலிங்கம், நிலையப்பொறுப்பாளர் திரு இ. செகராசசிங்கம், கலைப்பகுதிப் பொறுப்பாளர் திரு. ச. இரத்தினம், விளையாட்டுப் பகுதிப் பொறுப்பாளர் திரு. சி. விக்னராசா. நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

---

## சமய தீட்சை

கைதடி, ஞாயிறு

மகாசிவராத்திரியன்று கைதடி கிழக்கு இந்துவாலிபர் சங்கத்தின் சார்பில் கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் ஐம்பது சைவ அடியார்களுக்கு சைவக் குருக்கள் பரமசாமி அவர்களால் சமய தீட்சை வழங்கப்பட்டது. தீட்சையின் அவசியம்பற்றி சொற்பொழிவாற்றும்போது "இன்று எங்கும் சமய உணர்வு அருகிவிட்டது சமயம் மதியம் திரும்பியவர்கட்குத்தான் வேண்டும் என்ற மூடக்கொள்கையை அறவே நீக்கவேண்டும் இப்படியான சைவ ஸ்தாபனங்கள் தோன்றி புன்னறியதனில் செல்லும் மக்களை விலக்கி நன்னெறியில் புக வழிகாட்ட வேண்டும்" என்றூர்.

---

## சமஸ்கிருத பரீட்சை

யாழ்ப்பாணம், திங்கள்

பம்பாய் பாரதீய வித்தியா பவனம் நடத்தும் சமஸ்கிருத பரீட்சை அடுத்த மாதம் 3-ந் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தூர் கேந்திர நிலையத்திலிருந்து இப்பரீட்சைக்கு 118 பேர் தோற்றுகின்றனர். பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுவி[illegible] திலும் விண்ண[illegible]னுப்பணம் இதுவரை[illegible] அனுப்பப்பட வில்லை.

[illegible]ந்தியாவுக்குப் பணம் அனுப்புவதற்கு அரசாங்கம் தடை விதித்திருப்பதுவே விண்ணப்பமனுப்பணம் அனுப்பமுடியாமல் இருப்பதற்குரிய காரணமாகும்.

---

## புதிய கந்தோர்

கோப்பாய், சனி

அரசாங்க நன்கொடை ரூ 12,000 செலவில்கட்டப்பட்ட புத்தூர் கிராமசபையின் புதிய கந்தோரை புத்தூர் கிராம சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா சமீபத்தில் திறந்துவைத்தார்.

---

ஆசிரியருக்குக் கடிதம்

# தேசிய ஒற்றுமை

மேல்நாடுகளுடன் ஒப்பிடும்போது நம் நாடு பொருளாதாரத்துறையில் மிகவும் பிற்போக்கான நிலையிலுள்ளது. எதிர்கால உலகம் உண்மையாகவே சுபிட்சமானதாக அமைய நாமும் மேல்நாட்டினரையொத்த தரத்தை அடையவேண்டும். அதற்கு பொருளாதாரத்துறையில் திட்டமிட்டு மிகுந்த வேகத்துடன் முன்னேறவேண்டும்.

அத்தகைய முன்னேற்றம் நம் நாட்டின் சகல சக்திகளையும் பூரணமாகப் பயன்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. மக்களெல்லோரும் முழுமனதுடன் தம்மால் ஆகக்கூடிய பங்கை நிறைவேற்றினாலேதான் நாம் மேல்நாட்டினரை எட்டிப் பிடிக்கமுடியுமென நம்பலாம். அத்தகைய நிலையேற்பட நம் மக்களிடையே ஒற்றுமையும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், கட்டுப்பாடும் தேவை. மொழியால், சமயத்தால், இனத்தால் வேறுபட்டவர்கள் வாழும் நம்நாட்டில் அத்தகைய நிலை ஏற்படாவிட்டால் அது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகவே முடியும்.

இன்று நம் நாட்டில் தேசிய ஒற்றுமை குன்றியிருக்கின்றது. சிறுபான்மை மக்கள் நம்பிக்கை குறைந்து, விரக்தி மனப்பான்மையுடையவர்களாகவிருக்கின்றனர். அத்தகையவர்கள் முன்னேற்றத் திட்டங்களில் முழுமனதுடன் பங்குபற்றி உழைப்பார்களா? ஆகக்கூடிய பங்கை நிறைவேற்றுவார்களா? அவர்கள் ஆதரவு கொடுக்காமலிருப்பது மாத்திரமல்லாது, பலவழிகளில் முயன்று முட்டுக்கட்டையே ஏற்படுத்துவார்கள். இதனாலேயே நம் நிலைமை மோசமாகவுள்ளது.

இவற்றில் மிகமுக்கியமானது சிங்களவர்—தமிழர் இடையேயுள்ள மனக்கசப்பே. இவ்விடயத்தில் இப்போது சிங்கள மக்களிடையே மனமாற்றம் ஏற்பட்டுவருவது கவனிக்கத்தக்கது. தமிழர்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்படவேண்டுமென்பதுவும், அவர்களின் ஆதரவின்றி நாடு முன்னேற முடியாதென்பதுவும் சிங்களச் சகோதரர்களுக்கு புரிகின்றது. திரு. வில்மட் ஏ. பெரேரா இவ்விடயத்தில் முன்னின்றுழைப்பது யாவருமறிந்த ஒன்று. சமீபத்தில் வெளியான தேசியக் கல்விக் குழுவின் அறிக்கையில் சிங்களம கட்டாய பாடமாக்கப்படுவதை நான்கு சிங்களப் பெருமக்களும், சமய அடிப்படையில் உத்தியோகங்களுக்குத் தெரியப்படுவதை ஏழு சிங்களப் பெருமக்களும் எதிர்த்திருப்பதை நாம் கவனிக்க வேண்டும் பௌத்த—இந்து ஒற்றுமையைப் பலப்படுத்த பௌத்தர்களே முன்னின்று சங்கமமைத்திருப்பதுவும், அரசாங்கக் கட்சிப் பாராளுமன்றக் குழுவினரிடையே பலர் இவ்விடயத்தில் ஆர்வம் காட்டுவதாகக் கூறும் பத்திரிகைச் செய்தியும், கொழும்பில் சிங்களவர் தமிழ் படிக்கும் வகுப்பில் சேர்ந்திருப்பதுவும் மேலும் நம்பிக்கையூட்டுவதாக [illegible] இலங்கையின் மிகப் [illegible]ரிய ஆசிரிய சங்கமான இலங்கா ஜாதிக குரு சங்கம் தமிழ் ஆசிரியர்கள் சிங்கள மொழி கற்காமைக்காக சம்பள உயர்வு நிறுத்தப்பட்டதை எதிர்த்து போராடியிருக்கின்றது. சமீபத்தில் காலமான அதன் முன்னாள் தலைவர் திரு. எல். மெத்தானந்தா இவ்விடயத்தில் முன்னின்றுழைத்தவர். தமிழ் ஆசிரிய சங்கத்துடன் மிகநெருங்கிய உறவை ஏற்படுத்துவதை தம்முடைய சங்க அங்கத்தவர்கள் விரும்புவதாக அச்சங்கக் காரியதரிசி திரு. எல். ஆரியவன்சா என்னிடமே கூறியிருக்கின்றூர்.

தமிழ் மக்களின் எதிர்காலம் இத்தகைய நியாய மனப்பான்மை படைத்த சிங்களச் சகோதரர்களின் கைகளைப் பலப்படுத்துவதிலேயே தங்கியிருக்கிறதெனலாம். சிங்கள—தமிழர் உறவைப் பலவழிகளிலும் முயன்று பலப்படுத்த வேண்டும். நல்லெண்ணத்தை வளர்ப்பதாலேயே நம் நாடும், தமிழ் மக்களும் முன்னேறமுடியும். இலக்கியத்துறையில் திரு. சோ. நடராசாவின் 'பூவைவிடுதூது' என்ற மொழிபெயர்ப்பு பாராட்டத்தக்க முயற்சி. அத்தகைய இலக்கியப் பரிமாற்றத்திற்கு எழுத்தாளர்கள் உதவவேண்டும். சிங்களவர்கள் தாம் எண்ணிக்கையில் கூடியவர்கள் என்பதினால் நம்மை அவமதிக்கின்றூர்கள் என்று கருதும் நாம், மொழிவளத்தால், வாழ்க்கை முறையில் நாம் உயர்ந்தவர்களௌனவெண்ணி அவர்களின் மொழியையும், வாழ்க்கை முறையையும், அதுபற்றிய அவர்களின் நியாயமான அபிலாட்சைகளையும் துச்சமாகக் கருதக்கூடாது. அவற்றிற்கு மதிப்புக் கொடுப்பதுடன் வளர்ச்சிக்கும் இயன்றதை உதவவேண்டும்.

இத்தகைய, பெருந்தன்மையான முயற்சிகளே நல்லெண்ணத்தை வளர்த்து ஒற்றுமையைப் பலப்படுத்தும்.

'அனுதாபி'

அவளைத் தீவு.

---

## வீட்டுக்கு தீ வைத்தாராம்

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறையைச் சேர்ந்த திருமதி சதாசிவம் அதே ஊரைச் சேர்ந்த பூரணம் சின்னத்தம்பி என்பவரின் வீட்டுக்கு சென்ற வருடம் கார்த்திகை மாதம் 28-ந் திகதி பட்டப்பகலில் நெருப்பு வைத்து 350 ரூபா நஷ்டம் விளைவித்ததாக காங்கேசன் துறைப் பொலிசார் குற்றஞ்சாட்டி மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. வெஸ்லி டி. தமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கொடுத்துகொள்ளப்பட்டபோது திருமதி பூரணம் சின்னத்தம்பி சாட்சியமளிக்கையில் கூறியதாவது: நான் எதிரியின் காணியில் நானே வீடு கட்டினேன். காணிக்குத்தகையாக 3 ரூபாய் கொடுத்தேன். தனது வீட்டில் வேலை செய்ய என்னை வரும்படி கேட்டார். இவரின் வீட்டில் வேலை செய்தால் சம்பளம் தருவதில்லை சம்பவ தினம் நான் வேலைக்குச் சென்ற பின் எதிரி வந்து வீட்டுக்கும் வேலிக்கும் நெருப்பு வைத்து சென்றூர். நான் வேலை செய்த இடத்தில் நிற்கும்போது வீட்டுப்பக்கமாக அழுது சத்தம் கேட்டது. ஓடிவந்து பார்த்தேன். வீடு எரிந்துவிட்டது வீட்டில் நானும் புருஷனுமே வசித்து வருகிறோம்.

மாஜிஸ்டிரேட் மேல் விசாரணையை அடுத்த மாதம் 8-ந் திகதி ஒத்தி வைத்தார்

எதிரி தரப்பில் திரு. ஆர் ஜே. செல்வரத்தினம் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம் ஆஜரானர். திரு. பாலசுப்பிரமணியத்தின் அனுசாரணையுடன்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கந்தையா வழக்கை நடத்தினர்.

---

## அமெரிக்காவில் லாவோஸ் மன்னர்

வாஷிங்டன், பெப். 24

லாவோஸ் மன்னர் சவாங் வத்தனவும், லவோஸ் பிரதமரும், உதவிப் பிரதமரும் சுவிர்சர்லாந்திலிருந்து அமெரிக்கா வந்துள்ளனர்.

# ஆகஸ்டில் மலேசியா அமைவது உறுதி

## துங்கு அறிவிப்பு

கோலாலம்பூர், பெப். 24

"என்ன நடந்தாலும் ஆகஸ்ட் மாதம் 31-ம் திகதி மலேசியா சம்மேளனம் அமைக்கப்படுவது உறுதி" என்று மலாயாப்பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் நேற்று இங்கு ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறினர்.

போர்ணியோ பிராந்தியபகுதி மக்களுக்கு விடுதலை அளிக்கும் அடிப்படையில் மலேசியக் கூட்டரசு அமைக்கப்படுகிறதென்று பிரதமர் துங்கு கூறினர்

மலேசியா அமைப்பு சம்பந்தமாக மலாயாமீது இந்தோனேஷியா கொண்டுள்ள போக்குக்கு பிரதமர் துங்கு கண்டனம் தெரிவித்தார்.

மேற்கு இரியான் விவகாரத்தில் மலாயாத் துறைமுகங்களில் டச் கப்பல்களுக்கு மலாயா இடம் அளிக்க மறுத்ததையும் இந்தோனேஷியாவுக்கு மலாயா ஆதரவு அளித்ததையும் துங்கு குறிப்பிட்டார்.

"மலாயாவை இந்தோனேஷியா தாக்கினல் அதை எதிர்த்துச் சமாளிப்பதற்கு மலாயா பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கும் நாடுகளிடம் மட்டுமல்ல மலாயாவுக்கு ஆதரவு காட்டும் நாடுகளிடமிருந்தும் உதவி பெற்றுக் கொள்ளும்" என்று பிரதமர் துங்கு அறிவித்தார்.

# 84 வயதில் 83 புத்தகங்கள்

நியூயோர்க், பெப். 22

அப்டொன் சின்கிளேயர் தமது 84 வயதில் 83-வது புத்தகத்தை எழுதிக்கொண்டிருக்கிருர். இதை அவர் விரைவில் முடித்து விடுவார் எனத் தெரிகிறது.

1933-ம் வருடத்தில் கலிபோர்ணியா கவர்னர் பதவிக்கு போட்டியிடா திருந்தால் அவர் தமது வயதுக்கொரு புத்தகம் எழுதியிருந்திருப்பார் இவர் இப்போட்டியில் தோற்ருலும் எழுதுவதில் தோற்கவில்லை.

எழுதுவதை எப்பொழுது நிறுத்திக்கொள்ளப் போகின்றீர்கள் எனக் கேள்வி ஒன்று கேட்கப்பட்டபோது அவர் சிரித்துக்கொண்டே இறந்ததும் தான் எனப்பதிலளித்துள்ளார்.

# இலங்கையையும் சேர்த்து ஒரு ஐக்கியமுன்னணி

## சீனரைவிரட்ட இந்திய ஜனசங்க கட்சிக் காரியதரிசி யோசனை

பம்பாய், பெப். 24

இந்தியாவிலிருந்து சீனரை அகற்றுவதற்கு இலங்கை, தாய்லாந்து, மலாயா, நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்த்து ஐக்கிய முன்னணி ஒன்று அமைக்க வேண்டும் என்று ஜனசங்க கட்சிக் காரியதரிசி திரு. ஜகன்னுத ராவ்ஜோஷி யோசனை கூறியுள்ளார். இந்நாடுகளுடன் இதர ஆசிய நாடுகளையும் ஐக்கிய முன்னணியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அவர் கூறினர்.

மாபெரும் பொதுக்கூட்டமொன்றில் பேசிய திரு. ஜோஷி ஆசியா முழுவதையும் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவதற்கு சீனஎடுத்தமுதல் நடவடிக்கைதான் இந்தியா மீது தாக்குதல் நடத்திய காரணம் என்று கூறினர்.

கொழும்பு மகாநாட்டு யோசனைகள்பற்றி திரு. ஜோஷி குறிப்பிட்டு அந்த யோசனைகள் வெற்றியளிக்காமல் போய் விட்டதென்றும் போர் புரிந்து சீன 'ரைவிரட்டியடிக்கவேண்டு மென்றும் கூறினர்.

# தாயகம் திரும்பிய இந்தியர்

நைரோபி, பெப். 23

மொஸாம்பிக்கிலிருந்து கடந்த இரண்டு மாதங்களிலும் 20,000-க்கு அதிகமான இந்தியர்கள் தாயகம் திரும்பியுள்ளனர் என்றும் இன்னும் 2,000 இந்தியர்கள் மொஸாம்பிக்கில் இருக்கிருர்கள் என்றும் நைரோபிலிருந்து இன்று வெளியான செய்தி யொன்று கூறுகிறது.

# இந்தியாவுக்கு சோவியத் யூனியன் வழங்கும் உதவி

## "டாஸ்" ஸ்தாபனம் விளக்கம்

மாஸ்கோ, பெப். 24

இந்தியாவுக்கு சோவியத் யூனியன் 'மிக்' ரக போர் விமானங்கள் வழங்குவதுபற்றி சோவியத் செய்தி ஸ்தாபனமான டாஸ் நேற்று விளக்கம் தெரிவித்தது.

இந்தியாவும் சோவியத் யூனியனும் முன்னர் செய்துகொண்ட தொழில்நுட்ப உதவி ஒப்பந்தத்தின் கீழேயே இந்த மிக் விமானங்கள் வழங்கப்படுவதாக அது தெரிவித்தது.

அந்த ஒப்பந்தத்தின்படி இந்தியாவில் 'மிக' ரக போர் விமானங்கள் உற்பத்தி செய்யப்படுவதற்கு சோவியத் யூனியன் உதவியளிக்க வேண்டும்.

இந்தியாவுக்கு சோவியத் யூனியன் பன்னிரண்டு 'மிக்' ரக விமானங்களை வழங்கும். இவற்றில் ஆறு விமானங்கள் இவ்வருட முடிவுக்குள்ளும் மிகுதி ஆறுவிமானங்கள் அடுத்த வருடத்திலும் இந்தியாவுக்கு வழங்கப்பட வேண்டும்.

# பர்மாவில் வங்கிகள் தேசியமயம்

ரங்கூன், பெப். 24

பர்மாவிலுள்ள தனியார் வங்கிகளை தேசியமயமாக்கும் பிரகடனமொன்றை பர்மா புரட்சி அரசாங்கத் தலைவர் ஜெனரல் நீவின் நேற்றுவெளியிட்டார்.

சோஷலிஸப் பாதையில் இந்த நடவடிக்கை மற்றொரு முன்னேற்றம் என்று பர்மா அரசாங்கம் தெரிவித்தது.

சில தினங்களுக்குமுன் பர்மா அரிசி ஏற்றுமதி இறக்குமதித் தொழில் தேசியமயமாக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

# அடேளலாமீது கல்வீச்சு!

## கடாங்காநகரில்!

எலிஸபெத்வில்லி, பெப்.24

கடங்காபிரிவினை முடிவடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டபின் முதல் தடவையாக எலிஸபெத்வில்லிக்கு விஜயம் செய்த காங்கோ பிரதமர் திரு. அடேளலாவுக்கு அல்பர்ட் என்ற இடத்தில் எதிர்ப்புக் காட்டப்பட்டது. இங்கு திரு. அடேளலா விஜயஞ்செய்தபோது அவர்மீது கற்களும் வீசப்பட்டன.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து திரு. அடேளலா தமது சுற்றுப்பிரயானத்தைக் குறைத்துக்கொண்டார்.

காங்கோ பிரதமருக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டிருந்தன.

துண்டுப்பிரசுரங்கள் விநியோகம் சம்பந்தமாக ஒரு ஐரோப்பியரும் ஒரு காங்கோலியரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட ஐரோப்பியர் லியப்போல்ட்வில்லிக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

# குஸ்நெட்ஸோவ் மாஸ்கோ பயணம்

ஜெனிவா, பெப். 54

ஜெனிவாவில் நடைபெற்று வரும் 17 நாடுகள் படைகுறைப்பு மகாநாட்டில் சோவியத் யூனியனின் தலைமைப் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளும் குஸ்நெட்ஸோவ் நேற்று திடீரென்று மாஸ்கோவுக்குப் பயணமானர். தனது அரசாங்கத்துடன் ஆலோசனை கலப்பதற்காகச் சென்றிருக்கும் திரு. குஸ்நெட்ஸோவ் நாளை ஜெனிவா திரும்பிவிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. மகாநாடு நாளை மூன்ருவது வாரமாகத் தொடர்ந்து நடைபெறும்.

# ஈராக் தூதுகோஷ்டி

## அல்ஜீரியாவுக்கு பயணம்

பாக்தாத், பெப். 23

ஐக்கிய அரபுக் குடியரசுக்கு விஜயம் செய்த ஈராக் அரசாங்க தூது கோஷ்டியினர், தங்களது பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு இன்று அல்ஜீரியா பயணமானர்கள். ஈராக் தூது கோஷ்டியினர், ஐ. அ. குடியரசில் இரண்டு நாட்கள் தங்கியிருந்தனர்.

இவர்கள் நடத்திய பேச்சுவார்தைகள் சம்பந்தமாக எந்தவிதமான அறிக்கையும் வெளியிடப்படவில்லை.

# ஐ.நா.பொருளாதார கமிஷன் தீர்மானம்

லியப்போல்ட்வில்லி, பெப். 24

ஆபிரிக்காவுக்கான ஐ. நா. பொருளாதாரக் கமிஷனிலிருந்து தென்னுபிரிக்காவையும் போர்ச்சுக்கலையும் வெளியேற்ற வேண்டுமென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகள் மட்டும் ஆதரிக்கவில்லை. மற்றும் 30 நாடுகள் ஆதரித்தன. இத்தீர்மானம் பற்றி ஐ. நா. மகாசபை இனி விவாதிக்கும்.

# இடைத்தேர்தல் ஒழுங்கு; கம்யூ. தலைவர்கள் கவலை

புதுடில்லி, பெப். 24

லோகசபைச் கம்யூனிஸ்ட் கட்சிக் குழுத்தலைவர் திரு. ஏ. கே. கோபாலனும் ராஜ்ய சபா கம்யூனிஸ்ட் கட்சிக் குழுத்தலைவர் திரு. பூபேஷ்குப்தாவும் நேற்று தேர்தல கமிஷனரைச் சந்தித்து ஒரு குறிப்பைக் கொடுத்தனர்.

அவசரகாலநிலை அமுலிலுள்ள இச்சமயத்தில் இடைத்தேர்தல் நடத்தினல் தேர்தல் சுயேச்சையாகவும் நேர்மையாகவும் நடைபெறுமெனக் கருத முடியாதென்று திரு. கோபாலனும் திரு. பூபேஷ்குப்தாவும் தேர்தல் அதிகாரியிடம் தெரிவித்தனர்

அவசரகாலநிலை அமுலிலுள்ள இச்சமயத்தில் இடைத்தேர்தல் நடாத்தத் திட்டமிட்டுள்ளதற்கு அவர்களிருவரும் கவலை தெரிவித்தனர்.

# 'உலக மாணவர் சங்கம்'

யாழ்ப்பாணம். ஞாயிறு

"உலகத்திலே மாணவர்களுக்கு ஒரு சங்கமுண்டென்ருல் அது பேடன் பவல் பிரபு ஆரம்பித்த சாரணீய இயக்கமேயாகும். அச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் நீங்கள் எல்லோரும் உண்மையில் பெருமைப்பட வேண்டியவர்களாவீர்கள்." என்றுபேடன்பவலின் பிறந்த தினத்தைக் கொண்டாடும்போது, இந்துக்கல்லூரி சாரண ஆசிரியர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் கூறினர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சாரணர்கள் கூடி சாரண இயக்கத் தந்தைக்கு நன்றி செலுத்தும் பொருட்டு கொடியேற்று வைபவம் நடத்தி விழா கொண்டாடினர்கள். கொழும்பிலும் கண்டியிலும் இவ்விழா கொண்டாடப்பட்டது.

# கூட்டுறவு இயக்கத்தில் ஊழல்: பொதுமக்கள் மனக்கசப்பு

## கமிஷனர் அறிக்கை தரும் விபரம்

கொழும்பு, ஞாயிறு

**அதிகமான கூட்டுறவுச் சங்கங்களில் பொருள் களவு, நிர்வாகச் சீர்கேடு, கமிட்டிகளைக் கலைத்துவிடுதல், பொய் போன்ற ஊழல்கள் இடம்பெற்று வருவதாகப் பொதுமக்கள் மனக்கசப்படைந்திருப்பதாகக் கூட்டுறவுக் கமிஷனரின் 61-ம் ஆண்டு அறிக்கை கூறுகின்றது.**

1961-ம் ஆண்டில் 17,370 லட்சம் ரூபா நிதிப்புழக்கத்திலிருந்ததாகவும், இத்தொகையில் மக்கள் வங்கியிடம் கையளிக்கப்பட்ட தொகை கணக்கிலெடுக்கப்படவில்லை என்றும் கூட்டுறவு அபிவிருத்திக் கமிஷனர் திரு ரி. ரி. குணரத்ன தனது 1961-ம் ஆண்டிற்கான அறிக்கையில் தெரிவித்துள்ளார். 1961-ம் ஆண்டில் நிதிப்புழக்கம் 1960-ம் ஆண்டு நிதிப்புழக்கத்தை விட 4750 லட்சம் ரூபா குறைந்துள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கபபடுகிறது.

இவ்வாண்டில் நிதிப்புழக்கத்தில் உள்ள பணத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் பிற கூட்டுறவுச் சங்கங்களும் 3,100 லட்சம் ரூபாவையும் பொருட்களை வாங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் 400 லட்சம் ரூபாவையும் மேலாகவும் புழக்கத்தில் வைத்திருந்ததாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது.

### கூட்டுறவு வங்கிகள்

கூட்டுறவு வங்கிகள், சங்கங்களுக்கு 61-ம் ஆண்டில் 5920 லட்சம் ரூபாவைக் கடனுக வழங்கியுள்ளது. இவ்வருடத்தில் 5870 லட்சம் ரூபா திருப்பி வங்கிகளுக்குக் கொடுக்கப்பட்டது. பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தவர்களுக்கு 366 லட்சம் ரூபாவை இவ்வாண்டில் கடனுக வழங்கியிருக்கின்றது. ஆனல் 340 லட்சம் ரூபாவையே இச்சங்கங்கள் திரும்பப்பெற்றுள்ளன. 1961ம் ஆண்டு இறுதிவரையில் இச்சங்கங்களுக்கு மொத்தம் 498 லட்சம் ரூபா அங்கத்தவர்களிடமிருந்து வாவேண்டியுள்ளது இத்தொகையில் 117 லட்சம் ரூபா முன்னைவருடங்களில் திருப்பிக கொடுக்கப்படாத பணமாகும்.

### சங்கங்கள்

1961-ம் ஆண்டில் 356 கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டதாயும், இவற்றில் 112 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களென்றும் கமிஷனர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். 41 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும், 51 இளம் விவசாயிகள் கழகங்களும் இந்த ஆண்டு பதிவுசெய்யப்பட்டன பிரதம கூட்டுறவுச் சங்கங்களில் மொத்தம் 1,571,548 பேர் இப்பொழுது அங்கத்துவம் வகித்து வருவதாகவும் இவர்களில் 24,946பேர் 1961ம் ஆண்டில் புதிய அங்கத்தவர்களாய்ச் சேர்ந்துகொண்டதாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது. 1961-ம் ஆண்டு இறுதிவரையில் 13,888 பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் இவற்றில் 12,055 பதிவுசெய்யப்பட்ட சங்கங்களென்றும், 1833 அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களென்றும் அறிக்கை தெரிவிக்கின்றது. அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களில் பாடசாலை கூட்டுறவுச் சங்கங்களும், பெண்கள் கூட்டுறவுச் சங்கங்களும் கணக்கிலெடுக்கப்பட்டுள்ளன.

### சங்கங்களில் களவு

அதிகமான கூட்டுறவுச் சங்கங்களில் பொருட்களைக் களவாக எடுப்பது, நிர்வாகச் சீர்கேடு. கமிட்டிகளை இல்லாமல் செய்தல், நேர்மையின்மை போன்ற சீர்கேடுகள் நடைபெற்று வருவதாக பொதுமக்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்கள் என்றும் கமிஷனரின் அறிக்கை குறிப்பிடுகின்றது. இதனல் கூட்டுறவு சம்மேளனமும, மாவட்ட கூட்டுறவுசங்கங்களும் ஒருஇலாகாபோன்று கடமையாற்றி கூட்டுறவு இயக்கத்தைத் திறம்பட நடத்த வேண்டும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கூட்டுறவு இயக்கங்கள் நாட்டின் தன்மையைப் பிரதிபலிப்பதெனறும் அவற்றைத் திறம்பட நடாத்துவதில் அக்கறை காட்டுவது அவசியம் என்றும் திரு. ரி. ரி. குணரத்ன தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஊழியர் சம்பளம் குறைவு

கூட்டுறவுச் சங்கங்களிலும் ஐக்கிய பண்டகசாலைகளிலும் கடமையாற்றும் ஊழியர்களுக்கு மிகவும் குறைந்த சம்பளமே கொடுக்கப்படுவதாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது. கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் 17,828 ஊழியர்களில், 2,399 ஊழியர்கள 50 ரூபாவிற்குக் குறைந்த ஊதியத்தைப்பெறுவதாகவும், 8997 ஊழியர்கள் 50—100 ரூபா வரையான ஊதியத்தைப்பெறு

(7ம் பக்கம் பார்க்க)

## மணி வாக்கு

சத்யம், நேர்மை இவற்றைவிட மேலான மதம் இல்லை. உண்மையான சமயமும், உண்மையான ஒழுக்கமும் பிரிக்க முடியாதவை. மண்ணில் விதைக்கப்பட்ட வித்துக்கு நீர் எப்படியோ அது போல ஒழுக்கத்துக்கு மதமுமாகும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU: National Tami Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மாசி மீ 13 உ. (25-2-63)


## பத்திரிகை மசோதா

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது என்று ஒரு வசனமுண்டு. இப்போதுவெளியாகியுள்ள பத்திரிகை நகல் மசோதாவைக் கண்டதும்இந்த வசனம்தான் நமக்கு நினைப்பு வந்தது. இந்நாட்டிலுள்ள இரு ஏகபோக பத்திரிகை ஸ்தாபனங்களை தனி கார்ப்பரேஷன்களாக்கப் போவதாக இரு ஆண்டுகளுக்குமுன் சிம்மாசனப் பிரசங்கத்தில் அரசாங்கம் அறிவித்தது. ஆனால் இப்போது வெளியாகியுள்ள நகல் மசோதா, அவ்விதமெதுவும் செய்வதற்குப் பதில், பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவர்களை வரையும் பயமுறுத்தி, பத்திரிகைச் சுதந்திரத்தையே பறித்துவிடக் கூடிய முறையில் உள்ளது.

பிரசுரிக்கப்பட்டுள்ள நகல் மசோதாவின்படி 11 பேரடங்கிய பத்திரிகைக் கவுன்ஸில் ஒன்று நியமிக்கப்படும். அந்தச்சபையில், பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். வெளியார்களில் இருவரை ஜனப்பிரதிநிதிகள்சபையும் ஒருவரை செனட்சபையும், மூன்று சர்வகலாசாலைகள் மூவரையும், இரு வெளியார்களை இலங்கைப் பத்திரிகைக்காரர் சங்கமும் தெரிவுசெய்வதுடன், தலைவர் உள்ளிட்டு ஐவரை கவர்னர்ஜெனரல் நியமிப்பாராம். இந்தியாவிலே பத்திரிகைக்காரர்களே இவ்வித சபையில் அங்கம் வகிக்கின்றனர். ஆனால் இம்மசோவின்படி அமைக்கப்படும் சபையில் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவர் ஒருவருக்குக்கூட இடமில்லை.

பத்திரிகையின் லைசன்ஸைப் பறித்துபத்திரிகையையே நிறுத்திவிடக் கூடிய அதிகாரமும் இச்சபைக்கு இருக்குமாதலாலும் அச்சபையில் அரசாங்கச் சார்பினரே பெரும்பான்மையினராக இருப்பராதலாலும் பத்திரிகைக்காரர்கள் சுதந்திரமாக தங்கள் கருத்தைத் தெரிவிக்க முடியாமல் போய்விடக்கூடும். சிறப்பாக அரசாங்கம் தவறுகள் செய்யாமல், அவ்வப்போது குற்றங்குறைகளைப் பத்திரிகைகள் தைரியமாக எடுத்துக் கூறினல்தான் அரசாங்கமும் தன் தவறைத் திருத்திக் கொண்டு, ஜனநாயகத்தைச் சரிவர நடத்தவும் முடியும். ஆனால் இந்த நகல் மசோதாவின்படி, பத்திரிகைகளும், பத்திரிகைக்காரர்களும் அரசாங்கக் கொள்கைக்கு மாருக எதுவும் எழுத மிகவும் கூசக்கூடும்.

புதிதாகச்சுதந்திரம்கிடைத்த ஒரு நாட்டிலே பத்திரிகைகளின் பொறுப்பு மிகவும் அதிகம். வகுப்புவாதம், மதத்துவேஷம் முதலியவற்றைக் கிளப்பிவிடக் கூடிய விதமாகப் பத்திரிகைகள் எழுதப்படாதென்று தடுப்பது வரவேற்கத்தக்கதே. ஆனல் சிறுபான்மைச் சமூகத்தினர் தங்கள் மொழி, மதஉரிமைகளைப் பெறவும் தொழிலாளர் தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்ளவும் நடத்தும் முயற்சிகளை எந்தப் பத்திரிகைகளும் ஆதரிப்பதாயின், அரசாங்கத்தின் அதிருப்திக்கு அப்பத்திரிகைகள் உள்ளாகவும், அதனல் அவை பின்னர் நிறுத்தப்படக்கூடிய ஆபத்துக்கு உள்ளாகவும் கூடும். ஆகவே தங்கள் உயிரை முதலில் காத்துக் கொள்ள, பத்திரிகைகள் தங்கள் ஜனநாயகக் கடமையைச் செய்ய முடியாமலும் போகலாம். இதனல் சிறுபான்மை வகுப்பினரின் நிலை மோசமாகிவிடக்கூடிய ஆபத்தும் உண்டு.

ஜனநாயகத்துக்கு உயிர் பத்திரிகைச் சுதந்திரமே. ஆனல் இந்த நகல்மசோதாவின் விதிகள் புனிதமான இந்தத் தொழிலை ஆபத்தானதாக மாற்றுவதுடன், பத்திரிகைக்காரர்களின் மதிப்பையும் சுதந்திரத்தையும் குறைத்து, அவர்களைப் பயமுறுத்துவதாகவும், அந்தத் தொழிலிலிருந்து அவர்களை விரட்டிவிடக்கூடிய முறையிலும் இங்கு பத்திரிகைத் தொழில் வளர்ச்சிக்குத் தடை போடுவதாகவும் உள்ளது. இதனல் இங்கு சர்வாதிகார ஆட்சியும் தலைதூக்கலாம்.

சில பத்திரிகைகள் பொறுப்பற்ற முறையில் நடந்தால், அவற்றின்மீது தக்க நடவடிக்கை எடுக்கவோ சில செய்திகளைப் பிரசுரிக்காமல் தடுக்கவோ, இப்போதுள்ள சட்டப்படி அரசாங்கத்துக்குப் போதிய அதிகாரமுள்ளது. மற்ற ஜனநாயக நாடுகளில் இல்லாத முறையில், இங்குபத்திரிகைகள், பத்திரிகைக்காரர்கள் இவர்களின் சுதந்திரத்தைப் பாதிக்கும் புதிய கெடுபிடிச் சட்டங்களைக் கொண்டுவர எவ்வித காரணமுமில்லை. இந்த முக்கிய விஷயத்தில் அவசரப்படாமல் இம்மசோதாவைப்பற்றிப் பொதுமக்களின் கருத்தை அறிய விடவேண்டியது அவசியமாகும். அரசாங்கக் கட்சிக்குள்ளாகவே இதுபற்றி கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவதால், இவ்விஷயத்தில்அரசாங்கம் மிக நிதானமாக நடந்து கொள்ளுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது,

# இந்தியா-சீன தகராறு ஒரு நீண்ட யுத்தத்தின் ஆரம்பம்

யுத்த காலத்திற்குப் பிறகு சீனவில் ஏற்பட்ட கூட்டு அரசாங்கத்தில் முன்பு உதவி விவசாய மந்திரியாகப் பணியாற்றியவரும் தற்போது டோக்கியோவில் டோ-யூ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிபவருமான திரு. ஷி, சீனவின் மண்ணசையையும், மாஸே துங்கின் பேராசையையும் இக் கட்டுரையில் தெளிவுபடுத்துகிறார்.

உலக வெற்றியாளர்களுக்கு இந்தியா எப்பொழுதும் முக்கியமான இலக்காக இருந்து வந்திருக்கிறது. மகாவீர அலெக்சாண்டர், நெப்போலியன், அடால்ப் ஹிட்லர், லெனின் உட்பட பலர் இந்தியாவின் மீது கண்ணேட்டமிட்டவர்கள்தான். "மங்கோலியர்கள்" தான் உண்மையான வெற்றியாளர்கள். இந்தியாவை ஆட்சி செய்த வெளியார்களில் மங்கோலியர்களின் ஆட்சி மட்டுமே நீடித்திருந்தது. பிரிட்டிஷார் அகன்றுவிட்டனர். இப்போது கம்யூனிஸ்ட் சீனவின் இராணுவ சாகசம் இந்திய மண்ணுக்குள் தலைகாட்ட ஆரம்பித்துள்ளது.

செங்கிஸ்கானைக்காட்டிலும் அதிகப் பேராசை பிடித்த மாஸே துங் இமயத்தின் எல்லைக்குத் துருப்புக்களை அனுப்பி மற்றொரு மங்கோலிய சாம்ராஜ்யம் அமைப்பது சாத்தியமற்றதாகிவிடாது என்பதை உலகுக்கு நினைவு படுத்தினன். பிறகு ஏன் சண்டை நிறுத்தம் ஏற்பட்டது?

இந்தியா-சீனவுக்கு இடையே ஏற்பட்டுள்ள இப்போதைய தகராறு நீண்ட யுத்தத்தின் ஆரம்பமாகும். சீனவின் "யுத்தம்-யுத்தம்-பேச்சு-பேச்சு" என்ற திருகுதாளங்களின் ஒரு பகுதியே இப்போதைய சண்டை நிறுத்தம். இதன் மூலம் எதிரி மனேதத்துவ ரீதியில் ஆயுதங்களை வீசிவிடுவான்-மனே தைரியம் அகன்றுவிடுமென்பது அவர்களது நம்பிக்கையாகும். இதே போன்ற திருகுதாளத்தையே நாங்கிங்கிலிருந்த தேசிய சீன சர்க்கார் விஷயத்தில் கம்யூனிஸ்ட் சீனர்கள் கடைப்பிடித்தனர்.

லடாக்கிலும், வடகிழக்கு எல்லைப் புறத்திலும் சீன முன்னேற ஆரம்பித்ததும், முழு யுத்தத்திற்கு இந்தியா தயாரானதுடன், பிரிட்டன், அமெரிக்கா, கனடா முதலிய நாடுகள் உதவிக்கு விரைந்தோடி வந்தன. சீனவின் வாபஸ் நடவடிக்கையால் வெப்பம் தணிந்துள்ளது. அதைவிட முக்கியம் சீன அதன் பலத்தைப் பெருக்கிக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. எல்லைச் சண்டை தற்காலிகமாய் நின்றதற்கு சோவியத் ரஷ்யாவின் நெருக்கடியே காரணம் என்று சொல்ல முடியாது. லாடக்கைச் சீன கபளீகரம் செய்வதை விரும்பாததுடன், இந்தியாவுக்கு எம். ஐ. ஜி. விமானங்களையும் வழங்குவதாக ரஷ்யா உறுதியளித்தது. எனவே தென் கிழக்காசியாவில் தான் நடத்தும் பிராந்தியப் போரில் கம்யூனிஸ்ட் முகாம் என்பதற்காக ரஷ்யா தியாகம் செய்யாது என்பது பீக்கிங்கிற்குத் தெளிவாகிவிட்டது. சீன-ரஷ்யா எல்லையில் வாலாட்டினலொழிய, சீனவுக்கெதிராக ரஷ்யா பகிரங்கமாய் ... போவதில்லை.

கொழும்பில் கூடிய ஆறு நடுநிலை நாடுகளின் மகாநாடும் இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயகாவை புதுடில்லிக்கும், பீக்கிங்குக்கும் சமரசத் தூது செல்ல அனுப்பியதைத் தவிர வேறு ஒன்றும் சாதிக்கவில்லை. கம்யூனிஸ்ட் சீனர்கள் எல்லைப்புற சர்க்கார்களை நிறுவுவதில் வல்லவர்கள். எனவே எல்லை நெடுக "தன்னிச்சையாக இயங்கும் மக்கள் சர்க்காரை" நிறுவுவது அவ்வளவு கடினமாய் இராது. லடாக், நேப்பாளம், சிக்கிம், பூட்டான், அஸ்ஸாம் ஆகிய பிராந்தியங்களின் மக்கள் திபேத்தியர்கள், சீனர்கள் ஆகியோரின் வம்சாவளியினர். அவர்களது தோற்றமும் இந்தியர்களின் தோற்றத்தினின்று மாறுபட்டே இருக்கும்.

லடாக்கில் தலைமை லாமா கல்வி கற்க 7 ஆண்டுகளுக்கு முன் சீனவுக்குச் சென்றார். அங்கு கம்யூனிஸ்டுகளால் சிறை வைக்கப்பட்டுவிட்டார். அவரையோ அன்றி லடாக்கின் எதிர்க்கட்சியினரையோ வைத்து லடாக்கின் பொம்மை சர்க்காரை சீன அமைத்துவிடலாம். லடாக்கை மத்திய ஆசியாவின் கேந்திரமாக வைக்கவும் சீன பேராசை கொண்டிருக்கலாம். தற்போது பாகிஸ்தானிலும், துருக்கியிலுமுள்ள சீன முஸ்லிம்களுக்கும் கம்யூனிஸ எதிர்ப்பு முஸ்லிம்களுக்குமிடையேயுள்ள உறவுக்கு லடாக் முட்டுக்கட்டையாக இருக்கிறது.

முன்பு பிரிட்டிஷாருக்கும் இப்போது இந்தியருக்கும் எதிரான துவேஷ மனப்பான்மைகொண்டுள்ள 4,50,000 மக்களைக் கொண்ட நாகாலந்து அஸ்ஸாம் சமவெளியில் இருப்பதால் மாசேதுங் நாகர்களையும் கையில் போட்டுக்கொண்டு திருகுதாளம் செய்ய முற்படலாம். பர்மாவையும் நேபாளம், பூட்டான், சிக்கிம் ஆகியவற்றையும் ராணுவத்தால் வென்று லாவோஸ் தென் வியட்னமைக் கைப்பற்றி இறுதியில் மலாயாவையும், இந்தோனேஷியாவையும் குறிவைப்பதே மண்ணசைகொண்ட சீனவின் சதியாகும்.

"பலாத்காரம்மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றி யுத்தம் மூலம் பிரச்னைகளைத் தீர்ப்பதே புரட்சியின் சிறந்த ரூபம்" என்பது மாசேதுங்கின் சிந்தாந்தம். இது ஆசியாவுக்கே மிரட்டலாகும்.

## முன்னெச்சரிக்கை நிலையம்

புதுடில்லி, பெப். 24

வடஇந்தியாவின் குறுக்கே ஒரு முன்னெச்சரிக்கை நிலையம் ஒன்று அமைக்க வேண்டுமென கூட்டுறவு சாம்ராஜ்ய அமெரிக்க விமானத் துறை நிபுணர் குழு சிபார்சு செய்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க விமானக்குழு நிபுணர்கள் ஒருமாத காலமாக இந்தியாவில் தங்கியிருந்து அங்கு விமானத்தளங்களைப் பார்வையிட்டு அமெரிக்கா திரும்பியுள்ளனர். எதிரி விடக்கூடிய ஏவாயுதங்களும் பிற ஏவுகணைகளும் இந்தியாவின் தலைநகரங்களையும், கைத்தொழில் நிலையங்களையும் பாதிக்காமலிருப்பதற்கு வட இந்தியாவின் குறுக்கே ஒரு முன்னெச்சரிக்கை நிலையம் அமைப்பது அவசியமென நிபுணர்குழு சிபார்சு செய்யும்என நம்பப்படுகிறது.

## உருவப்பட திரைநீக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழப்பாணம் சைவபரிபாலன சபைத் தலைவர் காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு. அ. அருளம்பலம் அவர்களின் உருவப்படத்தை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திரைநீக்கஞ் செய்து வைக்கவிருக்கிருர். இவ்வைபவம் வருகிற புதன் கிழமைமாலை நடைபெறவிருக்கிறது.

## ஐயாறன் எழுதுவது

டேவிட் இங்ராம் என்பவர் கனடா தேசத்து வாலிபர். பி. ஏ. பட்டதாரி. பீபிள்ஸ் வங்கியில் சேர்ந்து சேவை செய்கிருர். யாழ்ப்பாணத்திலே அந்த வங்கியின் கிளை திறந்ததல்லவா? அதற்காக இங்கு வந்திருக்கையில், எப்படியாவது, யோகர் சுவாமிகளைத் தரிசிக்கவேண்டுமென்று ஆவல் காட்டினர்.

அவரை ஏன் பார்க்கவேண்டும்? என்ன கேட்கப்போகிறீர்கள்? என்று கேட்டதற்கு, அந்தப் பெரியவரைப்பற்றி தாம் அதிகம் கேள்விப்பட்டதாயும், "இந்த வாழ்க்கையின் நோக்கமென்ன?" என்ற என்பதை அவரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவதாகவும் தெரிவித்தார். விரட்டிவிட்டால் வருந்தாதீர்கள் என்று முன்னெச்சரிக்கை செய்தேன்.

* * *

கொழும்புத்துறை முனிவரிடம் கனேடிய வாலிபருடன் செல்லுகையில் காலை 7-30 மணி. கதவு திறந்திருந்தது. பார்க்கலாமா என்று கேட்டு, உள்ளே சென்று வணங்கினேம். தலையில் ஒரு முண்டாசு, கழுத்தில் ஒரு மேல் வேட்டி, இடுப்பில் சின்னத்துணி இத்துடனே காலைத் தொங்கப்போட்டு, சுவாமி ஆசனத்தில் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தார்கள்.

வெள்ளை வாலிபரைக் கண்டதும் ஆங்கிலத்தில், "த கிங்டம் ஆப் ஹெவன் இஸ் விதின் யூ (பரலோக ராஜ்யம் உமக்குள்ளேயே உள்ளது); ஸீ காட் எவ்வரி வேர் (தெய்வத்தை எங்கும் பாருங்கள்); த ஹோல் வர்ள்ட் இஸ் அண்டர் யுவர் பீட் (உலகம் அனைத்துமே உங்கள் காலடியில்)" என்றெல்லாம் சொன்னர்கள்.

இந்த வாழ்க்கையின் நோக்கமென்ன? என்று வாலிபர் கேட்டதும், சுவாமி சற்றே மௌனமாய் இருந்து, 'உங்களுக்கு என்ன வயது?' என்று கேட்டார். 22 என்று அவர் கூறியதும், "வர்க், வர்க், வர்க் (வேலை செய், வேலை செய், வேலைசெய்)"என்று இரு கைகளையும் பலமாக அசைத்தார். கடவுளை எல்லாரிடமும் கண்டு, பிறருக்கு உதவிசெய்ய வேண்டுமென்றும் கூறி, வாலிபரின் இரு கைகளையும் பிடித்து, நன்கு குலுக்கி, சிரித்து, 'நல்ல கை, நான் ஒரு பிச்சைக்காரன். உழைத்துத்தான் பிழைக்கிறேன்!' என்றெல்லாம் கூறினர்.

சுமார் அரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார். இடைஇடையே கண்ணைமூடி, நினைவு மறந்தது போலிருந்தார். பின்னர் வாலிபர் வாங்கிச்சென்ற கற்கண்டைத் தொட்டு, தாம் சிறு துண்டை வாயில் போட்டுக்கொண்டு, பலருக்கும் விநியோகித்து, மற்றதை வாலிபரிடமே கொடுத்துவிட்டார்.

அறையிலே ஒரு குத்துவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. ரோஜா முதலிய பல வாசமலர்களும் விளக்கடியை அலங்கரித்தன. தேத்தண்ணீர் கொண்டுவரச்செய்து, கொடுக்கச் சொன்னர். இடையிலே யாரோ ஒருவர் கதவுப்பக்கமாக வந்ததும் அவரைச் போகச்சொல்லிவிட்டார்.

தம்மை அப்படி விரட்டிவிடாமல், தொட்டு ஆசிகூறி வெகுவாகப் பேசியதுபற்றி வாலிபருக்கு மகிழ்ச்சி. என்றாலும் திரும்பி வரும்போது வழியிலே, "வாழ்க்கையின் நோக்கம் என்ன?" என்று கேட்டுக்கொண்டே வந்தார். இதைப் புரிந்துகொள்ள வயதும் அனுபவமும் அதிகமாக வேண்டுமென்றுதானே சுவாமி வயதைக் கேட்டது!

* * *

புலி வருகிறது புலி வருகிறதென்பதுபோல் இரண்டு வருஷமாக பத்திரிகை மசோதா வரப்போகிறதென்று பயமுறு

(5ம் பக்கம் பார்க்க)

# பங்கீட்டரிசிப் புத்தகங்கள் திருப்பிப் பெறும்திட்டம்

## உணவு உற்பத்தியைப் பாதிக்கும்

### பட்டிருப்பு எம். பி: அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

**நெல் உற்பத்தியாளரிடமிருந்து அரிசி பங்கீட்டுப் புத்தகங்களைத் திருப்பிப்பெற அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை உணவு உற்பத்தியைப் பெருக்கும் திட்டத்தைப் பெரிதும் பாதிப்பதாக இருப்பதோடு விவசாயத்திலீடுபட்டுள்ளவரைப்பெரிதும் கஷ்டப்படுத்துவதாக இருக்குமென பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராஜமாணிக்கம் 'ஈழநாட்'டுக்கு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.**

திரு. இராஜமாணிக்கம் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்பின்னர், விநியோகிக்கப்பட்டுவரும் அரிசியைக் குறைக்கவோ அல்லது அரிசிவிலையை அதிகரிக்கவோ அரசாங்கம் எதுவும் செய்யமாட்டாது என அறிவிக்கப்பட்டது.

இதை விடுத்து வேறு நடவடிக்கை எடுக்க முயற்சித்ததால் நிதிமந்திரி ஒருவர் தமது பதவியை இழக்கவேண்டி நேரிட்டது.

இதை உணர்ந்த மற்ற நிதி மந்திரிகள் பங்கீட்டரிசியில் கைவைப்பதில்லை யென்றும் நாட்டுக்குத் தேவையான நிதியை வேறுவழிகளில் பெற்றுக் கொள்வது எனவும் மக்களுக்கு உறுதியளித்திருந்தார்கள்.

ஆனல் இதற்கு நேர் விரோதமாக இபபொழுது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது சம்பந்தமாக வர்த்தமானியில் வந்துள்ளதாவது:

இலக்கம்: 1963-ம் வருடம் ஜனவரி 30-ம் திகதி 13494 உணவுவர்த்தககப்பல் போக்குவரத்து அமைச்சின் கையொப்பத்தின் கீழ்:

1. ஒவ்வொரு வருடத்தின் 12 மாதங்களிலும் ஒவ்வொரு காலங்களிலும் ஒவ்வொரு நிலத்திலும் எவ்வளவு நெல் விளைகிறது என்பதுபற்றி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி மதிப்பீடு எடுத்துத் தெரிவிக்கவேண்டும்.

இதன்பின்னர் குறிப்பிட்ட நிலத்தில் விவசாயம் செய்த நிலச் சொந்தக்காரர் பற்றியோ அறிவதுடன் அவர் விவசாயம்செய்த நிலத்தில் விவசாயம்செய்த காலத்தில் பெறப்பட்ட விளைச்சல் பற்றியும் மதிப்பீடுசெய்யப்படவேண்டும்.

2. நெல் உற்பத்திசெய்தவர் தாம் உற்பத்தி செய்த அளவு நெல்பற்றி மாவட்டக் காரியாதிகாரிக்கோ அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு உத்தியோகஸ்தருக்கோ தமது பங்கீட்டரிசிப் புத்தகத்திலுள்ள கூப்பன் துண்டுகளையோ அல்லது தமது குடும்ப அங்கத்தவர்களது பங்கீட்டரிசிப் புத்தகத்திலுள்ள கூப்பன் துண்டுகளையோ கீழ்க் கண்டவாறு ஒப்படைக்கவேண்டுமென எழுத்துமூலம் அவருக்கு அறிவிக்கப்படும்.

(அ) குடும்பத்திலுள்ள அங்கத்தவர்களோ விளைச்சல் செய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீரணமோ கவனிக்கப்படாது ஒரு ஏக்கருக்கு 20 புசல் நெல் அலவன்சாக கொடுக்கப்படும்.

(ஆ) விவசாயம் செய்யப்படும் ஒவ்வொரு ஏக்கருக்கும் விதை நெல் அலவன்சாக ஏக்கர் ஒன்றுக்கு இரு புசல் கொடுக்கப்படும்.

இதற்குப்பின் விவசாயம் செய்தவரின் அல்லது குடும்பத்தினரின் பங்கீட்டரிசிப் புத்தகங்களில் இருந்து கூப்பன் துண்டுகள் திரும்பிப் பெறுவது பற்றி கணிக்கப்படும்.

3-விருந்து 4 வரையான புசல்கள் கொண்ட ஒவ்வொரு கூடுதலான அளவுக்கும் விதை நெல் அளவுக்கு வழங்கப்படும் அலவன்சுக்கும் பங்கீட்டரிசிப் புத்தகத்திலுள்ள 13 கூப்பன் துண்டுகள் திருப்பி பெறப்படும்.

பின்உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு ஐந்து புசல் நெல்லுக்கும் 26 கூப்பன் துண்டுகள் திருப்பி பெறப்படும்.

உதாரணமாக 5 பேர்உள்ள குடும்பத்தை எடுத்துக்கொள்ளுங்கள் இவர்கள் இரு ஏக்கர் நிலத்தில் காமம் செய்து ஏக்கர் ஒன்றுக்கு 40 புசல் நெல் விளைந்தால் இரு ஏக்கருக்கும் 80 புசல் ஆகிறது.

அந்தக் குடும்பம் உணவு அலவன்சாக 20 புசல் பெறுகிறது விதை நெல் அலவன்சாக 4 புசல் பெறுகிறது. மொத்தம் 24 புசல்.

ஆனல் 56 புசலில் கூப்பன் துண்டுகள் எடுக்கப்படுகிறது. திருப்பி எடுக்கப்படும் கூப்பன் துண்டுகள் $\frac{56}{5}=11$ (ஒரு புஷல் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது)X26=286.

ஒருவருக்கு வருடமொன்றுக்கு உள்ள 52 கூபபன் துண்டுகளில் குடும்பம் அத்தனை கூப்பன்களையும் ஒப்படைக்கவேண்டியுள்ளது (52X5=260 கூப்பன் துண்டுகள்) இது ஒரு மதிப்பீட்டுக் கணக்கு என்பதை கருத்தில் கொள்ளவேண்டும்.

எவ்வளவு தொகையாக ஒரு நெல் உற்பத்தியாளர் கூப்பன்களைத் திருப்பி ஒப்படைக்கிருரோ அவ்வளவுக்கு அவர் கூப்பன்களை இழக்கிருர்.

இந்தத்திட்டம் பங்கீட்டரிசிப் புத்தகங்களை அரசாங்கத்திடம் திருப்பி ஒப்படைக்கச் செய்ய எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கை.

இவ்வித திட்டத்தின்படி இந்த நாட்டிலுள்ள 90 சதவீதமான நெல் உற்பத்தியாளர் தமது பங்கீட்டரிசியை இழப்பார்கள். இந்த திட்டம் 'அதிக உணவு பயிரிடக்கோரும் இயக்கத்தின் வளர்ச்சியைப் பெரிதும் தடுத்துவிடும். இதனல் நாட்டின் முதுகெலும்பு எனக் கூறப்படும் விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ள பகுதியினரைப் பெரும் கஷ்டத்துக்குள்ளாக்கி விடும்,

எனவே இவற்றை உத்தேசித்து இந்த திட்டத்தை அரசாங்கம் ரத்துச் செய்யவேண்டும்'.

---

## தூதர்கள் சேவை நீடிப்பு?

கொழும்பு, ஞாயிறு

மாஸ்கோவிலும், பீக்கிங்கிலும் உள்ள இலங்கைத் தூதுவர்கள் தொடர்ந்து கடமையாற்றுவார்கள் என நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. இவ்விரு தூதர்களின் சேவைக்காலமும் இந்தவருடம் மார்ச் மாதத்துடன் காலாவதியாகின்றது, ஆனல் மாஸ்கோவில் உள்ள தூதுவர் திரு. சுபசிங்கா, பீக்கிங்கிலுள்ள தூதுவர் திரு. ஏ. பி. பெரேரா ஆகியோர் தொடர்ந்தும் சேவையாற்றுவார்கள் எனத் தெரிகிறது.

---

## தீர்ப்பு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

மயிலிட்டியைச் சேர்ந்த சின்னவன் தில்லைநாயகம் என்பவரை அதே ஊரைச் சேர்ந்த கொத்தன் வெள்ளையன் பொல்லால் தாக்கி காயம் விளைவித்ததாக காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.

சின்னவன் தில்லைநாயகம், காங்கேசன்துறை டி. எம். ஏ. திரு. எம். வேதாரணியம், இலட்சுமிகாந்தன், திருமதி தில்லைநாயகம் பாக்கியம் ஆகியோர் சாட்சியமளித்தனர். பின்னர் எதிரியும் எதிரியின் சகோதரியும் சாட்சியமளித்தார்கள்

நீதிபதி எதிரியை குற்றவாளியாகக் கண்டு தீர்ப்புக் கூறுவதனை ஒத்திவைத்து எதிரியை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

எதிரி தரப்பில் திரு. கே. குமரகுரு ஆஜரானர். வழக்காளி தரப்பில் இன்ஸ்பெக்டர் கந்தையாவின் உதவியுடனும், ஆர். ஜே. செல்வரத்தினம் அனுசரணையுடனும் திரு. டி. கணேசலிங்கம் ஆஜரானர்.

---

## ஐயாறன்

(4-ம் பக்க[illegible])

[illegible]த்தி, பல நகல் மசோதாக்கள் தயாரிக்கப்பட்டு திருத்தப்பட்டன புதிய மசோதா விபரங்களைப் படித்ததும், இந்தப் பேனத் தொழில் போதும், வேறு ஏதாவது வேலைபார்க்கலாமா என்றும் தோன்றுகிறது. ஆனல் இது வெறும் பூச்சாண்டி என்றும், பழைய நகல் மசோதாக்களைப்போல் இதுவும் மூலையில் முடக்கப்படலாமென்றும் கூறுகிருர் ஒரு பேப்பர்கார நண்பர். என்ன நடக்கிறதோ பார்க்கலாம்.

---

# "காஷ்மீர் பேச்சை பாதிக்க மாட்டாது"

## பீக்கிங் செல்லுமுன் புட்டோ விளக்கம்

கராச்சி, பெப. 24

பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜனப புட்டோ இன்று சீனவுக்குப் புறப்பட்டுச் சென்ருர். அவர் பீக்கிங் போய்ச் சேருமுன் ஷாங்காயில் ஒரு நாள் தங்கியிருப்பார்.

ராவல்பிண்டியிலிருந்து நேற்றுக் கராச்சி வந்துசேர்ந்த புட்டோவை பாகிஸ்தானிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர், இந்திய ஹைகமிஷனர் திரு. பார்த்தசாரதி, பிரிட்டிஷ் உதவிஸ்தானிகர் ஆகியோர் சந்தித்துப் பேசினர். பேச்சுவிபரம் வெளியிடப்படவில்லை.

நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் ஜனப புட்டோ பேசுகையில் ஜனதிபதி அயூப்கானிடமிருந்து விசேஷ செய்தி எதையும் தாம்பீக்கிங்கிற்குக் கொண்டுசெல்லவில்லையென்றும் பாகிஸ்தான் அரசாங்கத்தினதும் மக்களினதும் நல்லெண்ணத்தைக் கொண்டுசெல்வதாகவும் கூறினர்.

பாகிஸ்தான்-சீன எல்லை ஒப்பந்தம் கைச்சாத்திடுவதால் இந்திய-பாகிஸ்தான் பேச்சுவார்த்தை எதுவும் பாதிக்கப்படுமா என்ற கேள்விக்கு ஜனப் புட்டோ பதிலளிக்கையில் "நான் அப்படி நினைக்கவில்லை" என்று கூறினர்.

இதற்கு முன் நடைபெற்ற முறையிலேயே கல்கத்தா பேச்சுவார்த்தைகளும் நடைபெறும்என்றும் அவர் கூறினர்.

தமது சீன விஜயம் திடீரெனச் செய்யப்பட்ட முடிவு அல்லவென்றும் முன்னரேயே திட்டமிடப்பட்டதென்றும் அவர் கூறினர்.

---

# 'அரசாங்கத்தின் கையில் கல்வி கைப்பொம்மை'

## கல்லூரி அதிபர் குறைபாடு

யாழ்ப்பாணம், திங்கள்

'தேசிய ஒருமைப்பாட்டை சட்டத்தின் மூலம் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்கும்போது கல்வி, அரசாங்கத்தின் கைப்பொம்மையாக மாறிவிடுகிறது' என யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. கே.ஏ. செல்லையா கல்லூரி பரிசளிப்பு விழாவின்போது பேசுகையில் கூறினர்.

திரு. செல்லையாமேலும் பேசுகையில் கூறியதாவது:

கல்வி அரசாங்கத்தின் கைப்பொம்மையாக மாற்றப்பட்டால் அதை அரசாங்கம் தனது அரசியல் நோக்கங்களை அடைவதற்கும் இன மத பேதங்களை உண்டாக்கி மறைத்துக்கொள்ளவும் பயன்படுத்திககொள்ளலாம்.

வளரும் உள்ளங்களில் தேசிசிய ஒருமைப்பாட்டை உருவாக்கக் கூடிய கல்வி பயனற்ற துறையில் பயன்படுத்தப்படுகிறது. பிரிவும் பிளவும் அதிகரித்து கல்வி உபயோகிக்கப்படுகிறது.

அரசாங்கம் பாடசாலைகளை எடுத்துக்கொண்ட பின் கல்விக்கமிஷன் ஒன்ற நியமித்தது. இதற்குப்பதிலாக அரசாங்கம் பாடசாலைகளை எடுத்துக்கொள்ளு முன்னர் கமிஷனை நியமித்து கமிஷனின் அறிக்கைப்படி நடவடிக்கை எடுத்திருந்தால் எவ்வளவோ நன்மை அளிப்பதாக இருந்திருக்கும்.

---

## சிவராத்திரி தினத்தில் சமயச் சொற்பொழிவுகள்

தெல்லிப்பழை, ஞாயிறு

சுன்னகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சிவராத்திரி தினத்தை முன்னிட்டுச் சென்ற வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணியளவில் விசேட உரைகள் நிகழ்ந்தன. ஐந்து மண்டபங்களிலும் திருவாளர்கள், கு. பாலசுந்தரக்குருக்கள் சி. பொன்னம்பலம், எஸ்.சேதுகாவலர், தி. விஸ்சுவநாதக்குருக்கள், கனகசுந்தரம் என்பவர்களால் சிவராத்திரி மகிமை பற்றிய சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

அன்றிரவு கல்லூரி விடுதி மாணவர்கள் கந்தரோடை இந்துசமய விருத்திச் சங்கத்துடன் இணைந்து, அவ்வூர் அருளானந் தப்பிள்ளையார் கோவிலில் ஆலயசேவையிலும் பங்குபற்றினர்.

கல்லூரி சமய விருத்திச் சபையினர் தயாரித்துள்ள திட்டத்தின்படி திங்கட்கிழமைகளிற் கூடும் கூட்டங்களில் அவ்வவ் வாரத்துக்குள்வரும்நாயன்மார் குருபூசைத் தினங்களும் ஏனைய பெரியார் தினங்களும் இவ்வாண்டு முதல் ஒழுங்காகக் கொண்டாடப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

---

# கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது

## பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜனரலின் 60-61வருட அறிக்கை

கொழும்பு, ஞாயிறு

சட்டவிரோதமாக கசிபபு தயாரிபபவர்களின் தொகையும், சட்டவிரோதமாக குதிரைப பந்தயம் நடத்துபவர்களினது தொகையும் அதிகரித்துக்கொண்டு வருவதாகவும், இது பற்றிய வழிவகைகளுக்கு அரசாங்கம் ஆலோசனை செய்து வந்தாலும் முடிவான வழி எதுவும் தீர்மானிக்கபடவில்லையென்றும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அபயக்கூன் தனது 60-ம் 61-ம் ஆண்டிற்கான அறிக்கை[illegible] தெரிவித்துள்ளார்.

நாட்டு[illegible]ளின் தேகநலனும் விரையமாகும் பணமும் சேமிக்கபபட வேண்[illegible]னல் சட்டவிரோதமாக[illegible] தயாரிப்பவர்கள் [illegible]தொகை குறையவேண்டும் என்று இன்ஸ்பெக்டர் ஜெனரல் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். கொலைகள், சைக்கிள் திருட்டு, வேறு பரிதாப சம்பவங்கள் போன்றவை 60-61 ஆண்டில் அதிகரித்துள்ளதாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது. தெருக்களில் ஏற்பட்ட விபத்துகள் அதிகமென்றும் இதற்கு வீதிகளின் அகலக்குறைவும் வாகனங்களின் தொகை அதிகரித்திருப்பதுமே முக்கிய காரணமெனவும் அறிக்கை தெரிவிக்கின்றது. பாதசாரிகள் கவனமற்று நடப்பதும் விபத்துகள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமென்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பார்த்தும் பார்க்காமலும் வீதிகளைக் கடப்பதும், வாகனங்களைத் திடீரென நிறுத்துவதும் விபத்துக்களுக்கு காரணமாயிருப்பதாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது.

---

## மிருக வைத்தியபகுதி தலைவர்

### விவசாயசபையில் நியமனம்

கொழும்பு, ஞாயிறு

மத்திய விவசாய சபையின் அங்கத்தவராக மிருக வைத்தியப்பகுதி தலைவர் டாக்டர் டி. டபிள்யு. அமரசிங்காவை விவசாய மந்திரி திரு. ஸி. பி. டி' சில்வா நியமித்துள்ளார்.

நாட்டின் விவசாய அபிவிருத்திபற்றி இந்தச்சபை மந்திரிக்குத் தெரிவிக்கும்.

---

புதுடில்லி, பெப். 23

சீன ஆக்கிரமிப்பைச் சமாளிப்பதற்காக மேற்கு ஜெர்மனி பாரதத்துக்கு விரைவில் உதவியளிக்க முன்வந்துள்ளது.

12 கோடியே 77 லட்சம் ரூபா வரையான உதவியை அளிக்க மேற்கு ஜெர்மனி சம்மதம் தெரிவித்துள்ளது.

# ஊர்தோறும் கல்விநல சபைஅமைக்க வேண்டும்

## கல்விநிலையங்கள் நிர்வாகத்துக்கு பண்டிதர் இரத்தினம் யோசனை

யாழ்ப்பாணம், திங்கள்
"பாடசாலைகளின் நிலைமையும் நிர்வாகமும் இன்றுபோல் முன்னர் எப்போதேனும் குழப்ப நிலை அடைந்திருக்கவில்லை. இதனால் ஆசிரியர்களும் மாணவர்களும் அடையும் இடர்ப்பாடுகளுக்கு அளவில்லை. இதற்குக் காரணம் அரசியல்வாதிகளின் அளவு கடந்த தலையீடும், கல்வி அமைச்சு நன்ருகச் செயலாற்ரு மையுமே' என்று பண்டித வித்துவான் கா. பொ. இரத்தினம் நேற்று வேலணையில் நடைபெற்ற பிரிவுபசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

வேலணை மத்திய கல்லூரியின் அதிபர் திரு. வே. தம்பு இடமாற்றலாகிச் செல்வதனை முன்னிட்டு பழைய மாணவர்கள் நடத்திய பிரிவுபசார விழாவில் திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

அரசாங்கம் பாடசாலைகளைப் படிப்படியாகவேனும் பொறுப்பேற்றிருந்தால் இப்போது ஏற்பட்டுள்ள குழப்ப நிலை தோன்றியிருக்கமாட்டாது. சுற்றறிக்கைகளை அளவின்றி வெளிப்படுத்தி ஆசிரியர்களை அமைதியாகத் தம் பணியைச் செய்யவிடாமல் குழப்பும் சூழ்நிலை உருவாகியிருக்கமாட்டாது. ஏறக்குறைய எல்லா ஆசிரியர்களும் எப்பொழுது தமக்கு மாற்றம் வருமோ என்ற ஏக்கத்துடனும் கவலையுடனுமே வாழ்கிருர்கள். ஆசிரியர்களின் அவலங்லை நீங்கி கல்வி அதிகாரிகளின் தயவில் வாழ்கின்ற இழிநிலையும் ஒழிந்து, அவர்கள் முன்போல சுதந்திரமாக வாழ்ந்தாலன்றி இந்நாட்டின் கல்வி நிலை எந்தவகையாலும் சிறப்படையாது.

### ஊர்தோறும் கல்வி நலச்சபை

இதனை உண்டாக்குவதற்கு அரசாங்கம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள பாடசாலைகளை அவ்வூர் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட கல்வி நலச் சபையிடம் ஒப்படைத்தல்வேண்டும். பொது உடைமை நாடுகளில் கல்வி நிலையங்கள் யாவும் அரசாங்கப் பொறுப்பில் உளவெனினும் அந்நிலையங்கள் பெரும்பாலும் இப்படிப்பட்ட சபைகளாலேயே நடத்தப்படுகின்றன. இச்சபைகளின் அனுமதியின்றி ஆசிரியர்களை மாற்றுவதுமில்லை, நியமிப்பதுமில்லை. இச்சபைகளில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் முதலானோரின் பிரதிநிதிகளும், மன்றங்களும், தொழிற்சங்கங்கள் முதலியவற்றின் பிரதிநிதிகளும் இடம் பெறுவர். இவ்வாறு செய்தால் ஊர் மக்கள் பாடசாலைகளுடன் தொடர்புகொண்டு அவற்றின் விருத்திக்கு உழைக்க முற்படுவர். ஆசிரியர்களும் அமைதியாகத் தமது கடமைகளைச் செய்வர். அரசியற் காரணங்களுக்காக இத்தகைய சபைகளை நிறுவாமல் இலங்கை அரசாங்கம் காலந்தாழ்த்துவதனல் இந்நாட்டின் கல்வி நிலை சீரழிந்துகொண்டேபோகிறது.

மாணவர்கள் தம் படிப்பை முடித்தவுடன் தமது வாழ்வை நடத்துவதற்குத் தகுதியான ஒரு தொழிலைப் பெறத்தக்கதாகவும், அவர்களை வழிப்படுத்துதல் அரசாங்கத்தின கடமையாகும். தேவையற்ற போட்டிகளையும் பூசல்களையும் உண்டாக்கிக்கொண்டு அரசாங்கம் இத்துறையிலே போதிய கருத்தைச் செலுத்தாமல் தத்தளிப்பதாலேயே படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகத் தொடங்கியுள்ளது. தொழில் முறைக் கல்விகளை ஊட்டப் போதிய அளவு திட்டங்கள் இன்னும் வகுக்கப்படவில்லை. தொழில் முறை வழிகாட்டல் முறை படி பெறவில்லை.

இந்நாட்டிலே இனப்பூசலும், தொழிற் போரும், சமயப் போட்டியும் தலைதூக்கி ஆடுகின்றன. இவற்றுக்கு ஊக்கமளிப்பதாலே ஆளுங் கட்சியினர் தம் அதிகாரத்தை நிலை நிறுத்த முயல்கின்றனர். இந்த நிலைமை நீடிக்குமாளுல் இந்நாட்டின் கல்வி நிலையும், பொருளாதார நிலையும், இன ஒற்றுமையும் பாழாகிவிடும். இந்த நாட்டினை நல்வழிப்படுத்தும் பெரும் பொறுப்பு இப்போது சிங்கள, தமிழ் ஆசிரியர்களின் கையிலேயே உள்ளது. தாங்களடையும் இடர்ப்பாடுகளைப் பொருட்படுத்தாமல் ஆசிரியர்கள் யாவரும் தங்கள் கடமைகளைச் சரியாகச் செய்து, மாணவர்களையும் நல்ல குடிமக்களாக ஆக்க முயலவேண்டும்.

மற்றும் பலர் பாராட்டுரைகள் வழங்கினர்.

### சிவராத்திரி விழா

22-2-63 சிவராத்திரி தினத்தன்று கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்க மகாசிவராத்திரி விழா கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் வெகுவிமரிசையாக நடைபெற்றது. வித்துவான் மு. சபாரத்தினம் பண்டிதர் த. சுவாமிநாதன் ஆசிரியமணி வே. சிவசுப்பிரமணியம் க. திருலோகசிங்கம் ஆகியோரின் சொற்பொழிவுகளும் ஆசிரியமணி சி. சரவணமுத்து அவர்களின் சங்கீத கதாப்பிரசங்கமும் ஆ. பொன்னையா, சி. விசயரத்தினம் கோஷ்டியினரின் பஜனையும் இடம்பெற்றது செல்விகள் சி. பூமணி, தி. பொன்னுப்பிள்ளை, த. புஷ்பராணி, ச. செல்வமலர் ஆகியோர் திருவாசகம் ஓதினர். விழா முடிவில் திரு. சி. விசயரத்தினம் இன்னிசை விருந்தளித்தார். நான்கு சாமங்களும் விசேட பூசைகளும் அபிஷேகங்களும் இடம்பெற்றது.

நாளொன்றுக்கு

# இரண்டு அவுன்ஸ் பால் இங்கு உட்கொள்ளப்படுகிறது

## வருடமொன்றுக்கு 16 முட்டைகள்

கொழும்பு, ஞாயிறு
'இலங்கை சுமார் 7 கோடி ரூபாவுக்கு பால் உணவை இறக்குமதி செய்கிறது. இவ்விதமிருந்தும் ஒருவர் சராசரி 2 அவுன்ஸ் பால் உணவையே நாளொன்றுக்கு உட்கொள்கிருர்' என விவசாயஉதவிடைரக்டர் டாக்டர் ஏ. அமரசிங்கா சென்ற வாரம் நடைபெற்ற பசிப்பிணியிலிருந்து விடுதலை மகாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

டாக்டர் ஏ. அமரசிங்கா மேலும் தெரிவித்ததாவது:

'கால்நடை பெருக்கும் கோழி வளர்ப்புக்கும் லட்சக்கணக்கான ரூபா அதிகமாகச் செலவு செய்யப்படுகிறது. ஆனல் வருடமொன்றுக்கு ஒருவர் சராசரி 16 முட்டைகளையும் 5½ றுத்தல் இறைச்சியையுமே உட்கொள்ளுகிருர்.

உட்கொள்ளப்படும் இந்த அளவு ஒருவருக்குத்தேவையான போஷாக்கு சக்தி நிறைந்த உணவுக்கு மிகக்குறைவாக இருக்கிறது.

இன்று நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்னை உணவு உற்பத்தியைப்பெருக்குவதே.

ஆட்டிறைச்சி தான் இலங்கையில் அதிக விலையில் விற்கப்படுகிறது. ஒருறுத்தல் 3ரூபாவுக்கு விற்கப்படுகிறது. 1961-ம் வருடம் 17,456 அந்தர் வெள்ளாட்டிறைச்சியும் 8,661 அந்தர் செம்மறி ஆட்டு இறைச்சியும் 3,890 அந்தர் மாட்டிறைச்சியும் சுமார் 19 லட்சம் ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டன.

புத்தளத்தில் இலாகா ஒரு ஆட்டுப்பட்டியை அமைத்துள்ளது இதில் 6,000 ஆடுகள் வரை வளர்க்கப்படும்.

## லண்டனில் டிபன் பேக்கர்

லண்டன், பெப். 24
கனடா பிரதமர் திரு. டிபன் பேக்கர் இப்பொழுது லண்டனுக்கு விஜயம் செய்துள்ளார். பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் மாக்மிலனை நேற்று அவர் சந்தித்துப் பேசினர் வர்த்தக விஸ்தரிப்புப்பற்றி அவர்கள் பேசியதாகத் தெரிகிறது.

### செய்தித் திரட்டு

வேலணை, சனி
அண்மையில் நடைபெற்ற கிராம சபைக் காரியதரிசிகள் தகுதித் தேர்தலில் வேலணைக் கிராமசபைவிகிதர் திரு. ஏ. ஜே. வரப்பிரகாசமும் பண்டத்தரிப்பு கிராமசபை விகிதர் திரு. செல்வரத்தினமும் சித்தியடைந்துள்ளார்கள்.

∴ ∴ ∴

வேலணை, சனி
வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை வளவினுள் புதிதாய் அமைக்கப்பட்ட கட்டடத்தை வேலணை மத்திய மகாவித்தியாலயத்திற்கு இடவசதிக்காக அரசாங்கத்தை எடுத்துக்கொள்ளும்படியும், சைவப்பிரகாச வித்தியாசாலை வழமைபோல் நிகழ்ந்துவர வேண்டுமென்றும், மேற்படி பாடசாலையின் பழைய கட்டிடங்களையும் அரசாங்கம் திருத்தியமைத்துத் தர வேண்டும் என்றும் வித்தியாபகுதியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் வேலணைக் கிராமசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

∴ ∴ ∴

### சொற்பொழிவு

கோப்பாய், சனி
'உலகில் பல சமயங்கள் உண்டு. அவை பல நதிகள் உற்பத்தியாகிப் பாய்ந்தோடி இறுதியில் கடலில் விழுவதுபோல் முடிவில் இறைவனடி சேருகின்ற உண்மைத் தத்துவத்தையே காட்டுகின்றன" என்று பேராசிரியர் எஸ். ஆர். துரைசாமி [illegible]கள் புத்தூர் [illegible]மாஸ்கந்தக் கல்லூரியின் உயர்தர மாணவ மன்றத்தில் 'சைவமும் த[illegible]வமும்' என்னும் பொருள் பற்றி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

∴ ∴ ∴

### மீசாலையில்

மீசாலை, சனி
மீசாலை சமாதான வாசத்தில் சிவராத்திரியை முன்னிட்டு மீசாலை இளைஞர் முன்னேற்றச் சங்கத்தினரின் நாடகமும் இசைக்கச்சேரியும் நடைபெற்றன.

சரசாலை இரட்டைக் கொலைவழக்கு

# சாட்சிக்கு நீதிபதி எச்சரிக்கை!

## ஜீ. ஜீ. தொடர்ந்து குறுக்கு விசாரணை

சாவகச்சேரி, ஞாயிறு
சரசாலை இரட்டை கொலை வழக்கு நேற்றுக்காலை சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நீதிபதி குறுக்கு விசாரணையின் போது பதிலளித்த நாகமுத்துவை பல தடவை எச்சரித்தார்.

முன்னுக்குப் பின் முரணாகவும், நேரடியான பதிலளிக்காமல், மழுப்பியபடியாலும், கேள்விக்கு சம்பந்தமில்லாத பதிலளித்த படியாலும், தாமதித்து பதிலளித்தபடியாலும் நீதிபதி சாட்சியை எச்சரித்து, பதில் சொல்லும் வரை மறியல் வைப்பேன் என்றும் கூறினர்.

சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மாணிக்கம் சாட்சியமளித்தார். எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் நாகமுத்துவை குறுக்கு விசாரணை செய்தார்.

ஜீ ஜீ: சரவணை வீட்டில் என்ன குளறினர்கள்.

சாட்சி: ஐயோ சுட்டுப் போட்டான் கணபதிப்பிள்ளை. என்று

ஜீ. ஜீ: குளறிய ஆளின் குரலை கண்டுபிடித்தீரா?

சாட்சி: ஆம்! தெய்வானையின் குரல்.

ஜீ. ஜீ: என் புருஷனைக் கண்பதிப்பிள்ளை சுட்டுப்போட்டதாக சத்தம் கேட்டதா?

சாட்சி: இல்லை

ஜீ ஜீ: எல்லாமாக எத்தனை சூடு கேட்டது.

சாட்சி: 5 சூடுகள்.

ஜீ. ஜீ: கொலை செய்யப்பட்டது எப்ப தெரியும்.

சாட்சி: அடுத்த நாள் காலை.

ஜீ. ஜீ: தெய்வானை குளறியதிலிருந்த இரண்டு பேருக்கும் சூடு விழுந்ததென்று அன்றிரவு தெரியுமா?

சாட்சி: ஆம் தெரியும்.

ஜீ ஜீ: நாகருடன் கதைத்தீரா?

சாட்சி: (வாயால் பதில் சொல்லாமல் தலையை ஆட்டினர்)

ஜீ. ஜீ: தலையை ஆட்டவேண்டாம். நேரடியான பதில் வேண்டும்.

சாட்சி: (மறுபடியும் தலையாட்டினர்)

நீதிபதி: தலையாட்டாமல், ஆம் அல்லது இல்லை என்று பதில் சொல்லும்.

ஜீ ஜீ: நாகருடன் என்ன கதைக்க முயற்சித்தீர்.

சாட்சி: யார் சுட்டதென்று கேட்டேன்.

ஜீ. ஜீ: மயங்கி கிடந்தவரிடம் யார் சுட்டதென்று கேட்டீர்! மற்றவர்களிடம் ஏன் கேட்கவில்லை?

சாட்சி: தேவராசா சொன்னர் யார் சுட்டதென்று.

ஜீ. ஜீ: அப்ப ஏன் நாகரைக் கேட்டீர்?

[illegible]ன் நாகரிடம் [illegible] சுட்டதென்று கேட்கவில்லை.

ஜீ. ஜீ: இதே கோர்ட்டில் 2 நிமிஷத்திற்கு முன் நாகனிடம், யார் சுட்டதாக கேட்டதென்று சொன்னீரா? இல்லையா?

சாட்சி: சொல்லவில்லை.

ஜீ ஜீ அப்படி நீதிபதி எழுதியிருந்தால் பிழை.

சாட்சி: ஆம்

ஜீ. ஜீ: மறு நாள் காலை சரவணை வீட்டில் எத்தனை மணி வரை நின்றீர்?

சாட்சி: காலை 8 மணிவரை.

ஜீ ஜீ: இன்ஸ்பெக்டர் அங்கே 7 மணிக்கு வந்தபோது நீர் காணவில்லையா?

சாட்சி: இன்ஸ்பெக்டர் வரவில்லை. நான் காணவில்லை

ஜீ ஜீ: 8 மணிக்கு பின் எங்கே போனீர்? விபரமாக சொல்லவும்!

சாட்சி: ஒன்றரை மைலுக்கு அப்பாலுள்ள தோட்டத்திற்கு போய், வேலைகள் செய்துவிட்டு மாடு ஆடுகளை கவனித்துவிட்டு வந்தேன்.

ஜீ. ஜீ: உமது சொந்தக்காரர்கள் பிணமாகக் கிடக்கிருர்கள் நீர் ஆடு மாடுகளை கவனிக்க போய்விட்டீர்!

சாட்சி: ஆம்.

ஜீ. ஜீ: நீதவான் வந்து விசாரணை செய்ததை கண்டீரா?

சாட்சி: இல்லை. நீதவான் போய்விட்டதாகச் சொன்னர்கள்.

நீதிபதி: மற்றவர்கள் சொன்னதை கோட்டில் சொல்ல வேண்டாம், நீர் கண்டதை சொல்லும்

ஜீ. ஜீ: நீர் இன்ஸ்பெக்டரிடம் ஏன் வாக்குமூலமளித்தீர்!

சாட்சி: நான் நீதவான் ஐயாவிடம் சொல்லவந்தேன் அவர் போய்விட்டார்

நீதிபதி: நீர் நீதவானை நேருக்கு நேர் காணவில்லை

சாட்சி: காணவில்லை

ஜீ. ஜீ: நீதிபதி வந்தபோது நீரும் இருந்தீர்! சாட்சி சொல்லவருமபடி கேட்டபோது நீர் போகவில்லை!

சாட்சி: நான் நிற்கவில்லை

நீதிபதி: மறுமொழி சொல்ல வேண்டும அல்லது சொல்லும் வரை மறியல வைப்பேன்

ஜீ. ஜீ: நீர் நின்றது பொய் மறுமொழி சொல்லும்.

சாட்சி: என்னென்று பொய் சொல்வது.

ஜீ. ஜீ: அப்ப நீர் நின்றிருககிறீர்

நீதிபதி: நேராக எனக்கு முன் பொய்சொல்வதால்தான் பொய் என்று சொல்ல மறுக்கிறீர்?

சாட்சி: ஆம பொய்.

ஜீ. ஜீ: துவக்குடன் எதிரிகளை கண்டதும என்ன நினைத்தீர்

சாட்சி: என்ன நினைப்பது!

நீதிபதி: சாட்சிக் கூண்டிலிருந்து கேள்வி கேட்கக் கூடாது. கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும். மூன்ரும் முறை மறுமொழி சொல்லாது கேள்வி கேட்டு மழுப்பியிருக்கிறீர் பலதடவை எசசரித்து விட்டேன். பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு... நேரடியான பதில் சொல்லும்!

ஜீ. ஜீ: தெய்வானையிடம் முதலையா கணபதிப்பிள்ளையா சுட்டதென்று ஏன் கேட்கவில்லை

சாட்சி: நான் கேட்கவில்லை

ஜீ. ஜீ: நீர் எதிரிகளைக் காணவில்லை. அதனல் கேட்கவில்லை

சாட்சி: நான் அவவுடன் கதைப்பதில்லை?

ஜீ.ஜீ: பொலிசுக்கு கணபதிப்பிள்ளை சுட்டதாக ஏன சொல்லவில்லை

சாட்சி: அவர் கேட்கவில்லை

ஜீ ஜீ: இங்கே சாட்சியமளித்தபாது நீதிபதியிடம் சொன்னீரா?

சாட்சி: இல்லை

ஜீ. ஜீ: பொலிசுக்குச் சாட்சியச் சொல்லும்படி உம்மிடம் யாரும் கூறவலலையா?

சாட்சி: இல்லை யாரும் கூறவில்லை.

ஜீ. ஜீ: இங்கே சாட்சியமளித்தபாது அங்கே நின்ற ஆட்கள சொன்னர்கள் வாக்குமூலம் கொடுக்கும்படி என்று சொன்னீரா!

சாட்சி: (மௌனம்)

ஜீ. ஜீ: பொலலைப்பற்றி பெலிசாரிடம்சொன்னீரா?

(8-ம் பக்கம் பார்க்க)

# வைத்தியர்-வழக்கறிஞர் கிரிக்கட் போட்டி

## நாளை நடைபெறும்

யாழ்ப்பாணம், திங்கள் நாளை ரம்ளான் விடுதலையை முன்னிட்டு யாழ்ப்பாணப்பகுதியில் உள்ள அரசாங்க வைத்தியர்கள் கோஷ்டிக்கும் வழக்கறிஞர்கள் கோஷ்டிக்கும் இடையே கிரிக்கெட் போட்டி ஒன்று நடைபெறவிருக்கிறது.

வழக்கறிஞர்கள் கோஷ்டியில் இரு மாஜிஸ்டிரேட்களும் யாழ்ப்பாண எம். பி. திரு. அல்பிரட் துரையப்பாவும் அங்கம் வகிக்கின்றனர். வைத்தியர்கள் கோஷ்டிக்கு பிரபல விளையாட்டு வீரருமான டாக்டர் சி. மயில்வாகனம் தலைமை தாங்குகிருர். வழக்கறிஞர் கோஷ்டிக்கு திரு. எஸ். எம். ராஜதுரை தலைமை தாங்குகிருர்.

ஒவ்வொரு கோஷ்டியிலும் அங்கம் வகிப்பவர்களின் பெயர்ப்பட்டியல்களையும் அவர்களைப்பற்றிய சில குறிப்புகளையும் கிரிக்கெட் ரசிகர்களின் நலனுக்காக இங்கு தருகிருேம்.

வழக்கறிஞர் கோஷ்டி: 1. திரு. எஸ். எம். ராஜதுரை: சிறந்தவகையில் துடுப்பெடுத்தாடுபவர். சென்ற வருடத்தில் பாராட்டுப் பெற்றவர், 2. திரு. ஐ. ராஜரத்தினம்: சென்ற வருடம் வழக்கறிஞர் கோஷ்டிக்கு தலைமை தாங்கியவர். திறமையாக பந்தெறியக் கூடியவர்; வலக்கையால் திறமையாகத் துடுப்பெடுத்தாடுவார். 3. திரு. அல்பிரட்துரையப்பா: கூடிய ரன்களைப் பெறும் வல்லமையாளர், பந்தைப் பாதுகாப்பதிலும் திறம்பட விளையாடுபவர். 4. திரு. என். ராசநாயகம்: உதவித் தலைவர், பந்தெறிவதை தொடக்கி வைப்பவர், குறிப்பிடக் கூடிய அளவிற்குத் துடுப்பெடுத்தும் ஆடுபவர். 5. திரு. எஸ். யோகநாதன்: வழக்கறிஞர் பக்கத்தில் முதல் துடுப்பெடுத்தாடுபவர். சென்ற வருடம் தனது கோஷ்டியிலேயே கூடிய ரன்களை எடுத்தவர். விதம்விதமாக பந்தை மாற்றி எறிவதில் சமர்த்தர். 6. திரு. வி. நாகராசா: முழு விசையுடன் துடுப்பெடுத்தாடும் திறமைசாலி, விசையாகவே பந்தெறிவதிலும் கெட்டிக்காரர். 7. திரு. என். அம்பலவாணர்: வலது கையால் தீரமாக துடுப்பெடுத்தாடும் திறமைவாய்ந்தவர், பந்தைக் காப்பாற்றுவதிலும் திறமைமிக்கவர். 8. என். விஜயநாதன்: வழக்கறிஞர் கோஷ்டியில் விக்கட் காப்பாளர் இவரே. குறிப்பிடக்கூடிய அளவிற்கு துடுப்பெடுத்தும் ஆடுவார். 9. ரி. ஞானச்சந்திரன்: சிறந்த துடுப்பெடுத்தாடுபவரும் கவனமுள்ள பந்து காப்பவரும். 10. திரு. ஏ. சஹீத்: சாதாரணமாக நல்ல பந்து காப்பாளர். அத்துடன் குறிப்பிடக்கூடிய அளவிற்கு துடுப்பெடுத்தும் ஆடுவார். 11. திரு. பி. சோமதிலகன்: வலது கையால் விதவிதமாக பந்தெறிவதில்திறமையானவர். துடுப்பெடுத்து ஆடுவதிலும் கெட்டிக்காரர். 12. எஸ். மகாதேவா: இடது கையால் துடுப்பெடுத்தாடுவதில் திறமைசாலி. வலது கையால் பந்தை மாற்றிமாற்றி எறிபவர். 13. திரு. கே. சேனுதிராசா: வலது கையால் துடுப்பெடுத்தாடுபவர். தனி அழகுடன் பந்தை அடிப்பவர்.

வைத்தியர் கோஷ்டி: 1. டாக்டர் திரு. சி. மயில்வாகனம்: விசையுடன் பந்தை அடிப்பதில் திற்மைவாய்ந்த இவர் சிறந்த விக்கட் காப்பாளருமாவார். 2. டாக்டர் ஜே. ரத்தினேஸ்வரர்: தனி அழகுடன் துடுப்பெடுத்தாடுவார். பந்தெறிவதிலும் திறமைசாலி. போட்டி நடைபெறும் தினத்தில் விடியற்காலை மூன்று மணிக்கு நாலு மைல் நடப்பவர். 3. டாக்டர் சி. அருள்பிரகாசம் கோஷ்டியின் 'டைசன்' என அழைக்கப்படுபவர். 4. டாக்டர் ஜே. வாலுப்பிள்ளை: ஆறு ரன் ஓட்டங்களை அடிப்பதில் சமர்த்தர். திறமையாகப் பந்துகாப்பவருமாவார். 5. டாக்டர் ரி செல்வராஜா: நுட்பமாக விளையாடுபவர். எந்தத் திசையில் வருகிறது என்பதை சொல்லமுடியாத அளவிற்குப் பந்தெறியும் திறமைசாலி. 6. டாக்டர் ஜே. ஹண்ட்: 'காச்' பிடிப்பதில் எப்பொழுதும் தவறிழைக்க மாட்டார். சமயத்திற்கேற்றவாறு துடுப்பை பிரயோசனப் படுத்துவார். டாக்டர் எல். ராஜகருணு: கோஷ்டியின் வன்மையான 'அணு குண்டு' இவர். 8. டாக்டர் எஸ் துரைசிங்கம்: துடுப்பெடுத்தாடுவதில் கவனம் செலுத்துபவர். 9. டாக்டர் ஈ. யோசப்: இவ்வருடம் தான் முதல்முறையாக கோஷ்டியில் அங்கம் வகிக்கிருர் இடது கையால் பந்தெறிவதில் சமர்த்தர். 10. டாக்டர் எஸ் முத்தையா: தனி அழகுடன் விளையாடுவதில் கூடிய கவனம் செலுத்துபவர். குறிப்பிடக்கூடிய அளவிற்கு துடுப்பெடுத்தாடுபவர். 11. டாக்டர். டபிள்யு சிவகுருநாதன்:- விளையாட்டு மைதானத்தில் நிகழக்கூடி எந்தக் காரியத்தையும் சமாளிக்கக்கூடியவர். 12. டாகடர். எம். பார்தோலோமூஸ்:- துடுப்பெடுத்தாடுவதிலும், பந்தெறிவதிலும் திறமைமிக்கவர். 13. டாகடர் ஜி. செல்லத்துரை:- இவர் வைத்தியர் - வழக்கறிஞர் போட்டிகள் பலவற்றில் கலந்துகொண்டவர். 14. டாக்டர் எம். சரவணபாலசூரியர்:- கோஷ்டியின் பிரபல மனேஜர். 15. டாக்டர். ஸி. சண்முகநாதன்:- இடது கையால் பந்தெறிவதில் திறமையுடையவர்.

வழக்கறிஞர் - வைத்தியர் கிரிக்கெட்போட்டி பல காலமாக நடைபெற்று வருகிறது. ருசிகரமான இவ்விளையாட்டை ஆண்டுதோறும பலர் கண்டு களிக்கின்றனர். இம்முறையும பலர் கண்டு களிப்பார்கள் என எதிர்பாரக்கப்பட்டு அதற்கான சகல ஒழுங்குகளும நடைபெற்று வருவதாகத் தெரிய வருகிறது.

## வானெலி நிகழ்ச்சிகள்

### திங்கள் 25-2-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-.0 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 கமலா கிருஷ்ணமூர்த்தி — வீணை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தமிழ் மூலம் சிங்களம், 9-30 தேர்ந்த இசை, 9-45 இலட்சுமிதேவி பாலகிருஷ்ணன் — பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய சங்கீதம், [illegible] குறிப்புகள், 7-30 செய்தி குறிப்புகள், 7-35 எஸ். நாகம்மா —பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 என். நடராஜன் — பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப்டபால், 7-35 இலக்கியஏடு, 7-40 படஇசை, 7-50 தபால்பெட்டி, 8-00 நமது கடமை — பேச்சு, 8-45 தேசபக்திப்படல்கள், 9-15 வெற்றிவாகை — தொடர்நிகழ்ச்சி, 9-30 என் நடராஜன் — பாட்டு.

## அரபுலீக்கில் மீண்டும் ஈராக்

கெய்ரோ, பெப். 24

அடுத்தமாதம் கெய்ரோவில் நடைபெறும் அரபுலீக் சபைக் கூட்டத்தில் ஈராக்கும் கலந்துகொள்ளும். 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் அரபுலீக்கில் குவாய்த்துக்கு அங்கத்துவம் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து லீக்கிலிருந்து குவாய்த் வெளியேறியது.

## கூட்டுறவு இய...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வதாகவும், 5,535 பேர் 100—200 ரூபா வரையான ஊதியத்தைப பெறுவதாகவும், 897 பேர்கள் மட்டுமே 200 ரூபாவிற்கு மேலான ஊதியத்தைப் பெறுவதாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது.

உதைபந்தாட்டம்

# கல்விஇலாகா, மாநகரசபை கோஷ்டிசம்பியன்களாகதெரிவு

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் அரசாங்க ஊழியர் விளையாட்டுச்சங்க ஆதரவில் பொலிஸ் மைதானத்தில் நடைபெற்று வந்த உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி முடிவடைந்துள்ளது. 'ஏ' பிரிவில் கல்வி இலாகாவும், 'பி' பிரிவில் முனிசிபல் கோஷ்டியும் சாம்பியனுகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

'ஏ' பிரிவில் உள்ள கச்சேரிக் கோஷ்டியும், சிமிந்தித் தொழிற்சாலைக் கோஷ்டியும் மிகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றதனுல் 'பி' பிரிவுக்கும், 'பி' பிரிவில் முனிசிபல் கோஷ்டியும், இ. போ. ச. கோஷ்டியும் கூடுதலான புள்ளிகள் பெற்றதனுல் 'ஏ' பிரிவுக்கும் மாற்றப்பட்டுள்ளன.

சாம்பியனுகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இரு கோஷ்டிகளுக்கும் வெற்றிக்கிண்ணங்கள் பரிசாக வழங்கப்படவிருக்கின்றன. இப் பரிசளிப்புவிழா நடைபெறும் தினத்தில் இரு உதைபந்தாட்டப் போட்டிகளும் நடைபெற ஏற்பாடகியுள்ளன. வடமாகாண அரசாங்க அதிபர் திரு வி. பி. வித்தாச்சி வெற்றிக்கிண்ணங்களை வழங்குவார். யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா தமது தந்தையின் ஞாபகார்த்தமாக வெற்றிக்கிண்ணமொன்றையும் வழங்குவார்.

புள்ளி விபரம் வருமாறு:

'ஏ' பிரிவு:

கல்வி இலாகா 9, கடற்படை 7, தபால் இலாகா 5, பொலிஸ் 4, கச்சேரி 3, சிமிந்தித் தொழிற்சாலை 2.

'பி' பிரிவு:

முனிசிபல் 8, இ. போ. ச. 6, மின்சார இாகா 4, சுகாதாரப்பகுதி 0, சிறைச்சாலை 0.

சிறைச்சாலைக்கோஷ்டி சுற்றுப் போட்டிகளிற் கலந்துகொள்ள விண்ணப்பித்திருந்தும் எப் போட்டியிலும் கலந்துகொள்ளத் தவறிவிட்டது.

இ. போ. ச. கோஷ்டி போட்டிகளில் கலந்துகொளளச் சந்தர்ப்பம் கிடைக்காவிடினும், மறு கோஷ்டிகள் விளையாடாமல் கொடுத்த வெற்றிகள் இ. போ. ச. கோஷ்டியை 'ஏ' பிரிவுக்கு உயர்த்தவும் உதவின.

அரசாங்க ஊழியர் விளை

(8-ம் பக்கம் பார்க்க)



3-வது வெற்றி வாரம்!

ராஜா (யாழ்ப்பாணம்)
மூருகன் (ஜிந்துப்பிட்டி)
நவா (சுப்பனித்தெரு)
ஓடியன் (கண்டி)



களிப்பூட்டும் கானங்கள்
முற்றிலும் புதிய கதை.

இலட்சிய ஜோடிகள்
ராஜேந்திரன் - விஜயகுமாரி
எம். ஆர். ராதா, எஸ். வி. ரங்கராவ், எஸ். ஏ. அசோகன்

நடித்த
ராஜேந்திரன் பிக்சர்ஸ்

முத்து மண்டபம்

பாஸ்கள் சலுகைகள் ரத்து.

வியாபாரம்பெருக
விளம்பரம்செய்க

# "இனத்தை அழிக்கும் முயற்சி"

## சிங்களத்தேர்வுபற்றி எஸ். ஜே. வி. கருத்து

யாழ்ப்பாணம், திங்கள்

"நமக்கேற்பட்டுள்ள கஷ்டங்களில் சிங்களம் படிப்பது முக்கியமானதாகும். இது ஒரு மொழிவாரித் திட்டமல்ல. இது நமது உரிமைகளையும், நமது இனத்தையும் அழிப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் ஒரு சதித் திட்டமாகும். சிங்களம் படிக்க வேண்டுமென்று அரசாங்க ஊழியர்களை அர்சாங்கம் வற்புறுத்திவருவது தீய எண்ணத்துடனுகும்."

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நேற்று மாலை யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: சிறிது காலமாகசிங்களப்பயிற்சிவராத ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு இல்லையென்று சொல் வந்து பின்னர் தமிழாசிரியர்க்கு சிங்களம் தேவையில்லையென்று தெரிவித்துள்ளது.

எமக்கு அத்தகைய கஷ்டங்கள் ஏற்பட்ட போதிலும் புத்திசாலித் தனமாகவும் திடமான மனதுடனும் உரிமைக்குப போராட வேண்டும்.

ஒரு இனம் உரிமைகளுடன் வாழவேண்டுமாயின் அந்த இனத்தில் உறுதியான தீர்மானமும் கஷ்டத்தைத் தாங்கும் சக்தியும்இருக்க வேண்டும்.

இன்றுள்ள பிரச்னைமொழிப் பிரச்னை மட்டுமல்ல இனப் பிரச்னையாகும். இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் சிங்களம் படிக்க வலுக்கட்டாயமாகத் திணிப்பு நடக்குமளவுக்கு நிலை மோசமாகியுள்ளது.

தோட்டப் பிள்ளைகளின் போதனமொழி சிங்களமே என்று கல்விக் கமிஷன் சிபார்சுசெய்துள்ளது. இப்பிரச்னைக்கு மேலும் வலிவூட்டப்பார்க்கிறது.

உடுப்பிட்டி எம். பி. திரு எம். சிவசிதம்பரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

சுயநலனுக்காக தமிழ் பேசும் மக்கள் இனத்தைக் காட்டிக் கொடுக்கக்கூடாது. இனத்தைக் காட்டிக்கொடுக்கும் செயலில் அரசாங்க ஊழியர்கள் ஈடுபடக்கூடாது.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்க மறுத்தால் அவர்களை அரசாங்கம் பதவியிலிருந்து நீக்க முனையலாம் இந்நிலை ஏற்படும்போதும் இலங்கை பிளவுபட அத்திவாரக்கல் நாட்டுவதாகப்பட்டுவிட்டது என்றே கருதவேண்டும்.

ஒரு இனத்தை அடிமைப் படுத்த வேண்டுமானல் அந்த இனத்தின் பொருளாதாரத்தை நசுக்கவேண்டும் இதனையே இந்தியாவில் ஆங்கிலேயர் கையாண்டனர். அதுபோலவே சிங்கள அரசாங்கமும் எம் பொருளாதாரத்தை நசுக்கமுயல்கிறது.

கூட்டத்திற்கு தலைமை தாங்கிய திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

"தமிழ் ஆரசாங்க ஊழியர் தமிழ் பேசும் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கு முதுகெலும்பு போன்றவர்கள்.

தமது உத்தியோக உயர்வுக்காக சிங்களம் படிப்பதினல் அதைப்போன்ற வெட்கமான செயல் வேறென்றுமில்லை. தமிழ் அரசாங்க ஊழியர் ஒருமித்து சிங்களம் படிக்காமல் விட்டால் அவர்களை பதவியிலிருந்து விலக்கமுடியாது.

இவ்விடயத்தில் முன்மாதிரியாகவிருககவேண்டிய யாழ்ப்பாணத் தமிழ் ஊழியர்கள், ஏனைய மாகாணத்திலுள்ள அரசாங்க ஊழிரர்களுககு முன்மாரியாகவிருககவேணடும்.

வித்துவான் கா.பொ. இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:—

"சிங்களம்மட்டும் சட்டம் சிங்கள மக்களுக்கு எவ்வித பெரு நன்மையையும் செய்வதற்குக் கொண்டுவரப்பட்டதன்று. தமிழ்மக்களை மொழியற்றவர்களாக்கி அவர்களின் தொண்டைக்குள் சிங்களத்தைப புகுத்தி அவர்களைத் தனித்த ஓரினமாகவாழச் செய்யாமல் ஒழிக்கவே கொண்டுவரபபட்டது. சிங்கள மட்டும் சட்டம் தமிழருக்கிருந்த வாய்பபுகளை ஒழித்துவிட்டது.

சிங்களம் மட்டுமே சட்டமே இந்தநாட்டை பிரிவுபடுத்தியது. ஓரினம் ஒரு மொழி, ஒருமதம் என்னும் காட்டுமிராண்டுத்தனமான கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு எடுத்த முதல் நடவடிக்கையே சிங்களம் மட்டும் சட்டமாகும்."

கிளிநொச்சி எம். பி. திரு அ. சிவசுந்தரம், வழக்கறிஞர், திரு. ஜெயக்கொடி உட்படப் பலர் பேசினர் கூட்டத்தில் பலவினுக்கள் விடுக்கபபட்டன. அவற்றிற்கு பதிலளிக்கபபட்டது. கூட்டத்திற்கு அரசாங்க ஊழியர்கள் ஏராளமானவர் சமுகமளித்திருந்தனர்.

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு) வெம்பிளி (கண்டி)
ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை) மொடர்ன் (பதுளை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்!

காதுக்கினிய பாடல்களும், திடுக்கிடும் சண்டைக் காட்சிகளும் நிறைந்த படம்

★ நாட்டுக்குத் தேவையான நல்ல கதை
★ குடிப்பது ஒன்றே வாழ்வு என்று எண்ணுபவர்களுக்கு நல்ல பாடம்!!



சிவாஜி கணேசன், பத்மினி, ராகினி, தங்கவேலு, டி. ஆர். ராமச்சந்திரன், பி.கண்ணும்பா, சுந்தரிபாய், எம். ஆர். சந்தானம், பக்கிரிசாமி, புளிமூட்டை ராமசாமி, காலஞ்சென்ற சாயிராம்

மற்றும் பலர் நடித்த

புனர்ஜென்மம்

பின்னணி:
சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ராஜா, திருச்சி லோகநாதன், ஜிக்கி, சுசீலா, ஜானகி, சரஸ்வதி

| திரைக்கதை-வசனம் | டைரக்ஷன் | இசை |
| --- | --- | --- |
| ஸ்ரீதர் | ஆர்.எஸ்.மணி | டி.சலபதிராவ் |

மனோகரா
(யாழ்ப்பாணம்)

சிவாஜி - பத்மினி
நடித்த
எதிர்பாராதது

# ஸ்தலஸ்தாபன தேர்தலில் போட்டி

## தீண்டாமை ஒழிப்புக்கு முக்கிய முயற்சி

யாழ்ப்பாணம், திங்கள்

உடுப்பிட்டி, பருத்தித்துறை ஸ்தலஸ்தாபன சபைத்தேர்தல்களில் தமிழரசுக்கட்சியின் சார்பில் அபேட்சகர்களை நிறுத்துவதற்கு அபபகுதிக் கடசிக் கிளைகள் விரும்பினல் அதற்கு அனுமதி அளிபபதென்று தமிழரசுக்கட்சியின் செயல் கமிட்டி நேற்று தீர்மானித்தது.

சனிக்கிழமை பிற்பகல் ஆரம்பமான செயல் கமிட்டிக் கூட்டம் சனிச்கிழமை இரவு நீண்ட நேரம் கூடி ஆலோசனை செய்தது. நேற்றுக் காலை மீண்டும் கூடிய கமிட்டி நன்பகலுடன் ஒத்திவைக்கபட்டு பிற்பகலும் கூடி முக்கிய பல விஷயங்கள்பற்றி ஆராய்ந்தது.

உடுபபிட்டி, பருததித்துறை ஆகிய இடங்களில் ஸ்தலஸ்தாபன சபைத் தேர் தல்களில் கட்சி அபட்சேகர்களை நிறுத்த கூடசிக் கிளைகள் விரும்பினல் அவ்விதம் செய்ய அனுமதி வழங்குவதுடன் அதற்கான நடவடிக்கைகளுக்கு அவர்களுக்கு பூரண அதிகாரம் வழங்குவதென்றும் தீர்மானிக்கபட்டது.

### தீண்டாமை ஒழிப்பு

தீண்டாமை ஒழிபபு இயக்கத்தின் ஒரு அமசமாக ஸ்தலஸ்தாபனசபைகளின் உபவிதிகளில் திருத்தம் செய்து தேநீர், போசன சாலைகளில் ஜாதிவித்தியாசம் பாராட்டினல் அந்தக்கடைகளுக்குவழங்கப்படும் லைசன்சுகளை ரத்துச் செய்வதற்கு நடவடிக்கையெடுக்கும்படி ஸ்தலஸ்தாபனசபைகளைக் கோருவதென்றும் கமிட்டி தீர்மானித்தது.

### மரவரிமுறை ஆராய முடிவு

மரவரிமுறையை ஆராய்வதற்கென ஏழுபேர்கொண்ட உப குழு வொன்றை கமிட்டி நியமித்தது.

### தமிழ்ப் பிரதேச பெயர் மாற்றம்

தமிழரசக்கட்சியின் கமிட்டிக் கூட்டம், நேற்றுமாலை கட்சிக் [illegible]த்தில் நடைபெற்றது. தமிழ்ப் பிரதேசங்களுக்கு ஒரு தனியான பெயர் சூட்டுவது சம்பந்தமாக பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பெறும்பொருட்டு இது சம்பந்தமான விஷயம் கேற்றைய கமிட்டிக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படாமல் பின்போடப்பட்டதெனத் தெரியவருகிறது.

மதுபரிபாலன சம்பந்தமான விஷயங்களை ஆராய்ந்து, பார்லிமெண்ட் கமிட்டிக்கு மகஜர் சமர்ப்பிக்குமுகமாக, ஒரு உப கமிட்டி இன்று தேர்ந்தெடுக்கபபட்டது. இக்கமிட்டி, மதுபரிபாலன சம்பந்தமான அலுவல்களை ஆராய்ந்து பார்லிமெண்ட் கமிட்டிக்கு மகஜர் சமர்பபிக்கும்.

### சாட்சிக்கு நீதிபதி...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: அப்படி எழுதியிருந்தால் அது பொய்.

சாட்சி: ஆம். பொய்.

விசாரணை மர்ர்ச் மாதம் 1-ம் திகதி வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

---

### கல்வி இலாகா,...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

யாட்டுச்சங்க ஆதரவிலான 'நொக்-அவுட்' உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி மார்ச் மாத பிற்பகுதியில் நடைபெறுமெனவும் அறிவிக்கப்சட்டுள்ளது.

## தமிழ்ப்பகுதிகளில் புதிய தொழில்கள்

### சமஷ்டிக்கட்சிக் - குழு ஆலோசனை

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்ப்பிரதேசங்களில் புதிய தொழில்துறைகளை ஆரம்பிப்பதற்கு எந்தெந்தவகையில் தனியார்களுக்கு ஆலோசனை கூறி உதவிசெய்யலாமென்பதைக் கவனிப்பதற்கு தமிழரசுக்கட்சி ஒரு உபகமிட்டியை நிறுவியுள்ளது.

தமிழ்ப் பகுதிகளில் புதிய தொழில்துறைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் அனுசரணையாக இல்லாமல் இடையூறு விளைக்கும் முறையில் நடந்துகொள்வதாக தமிழரசுக்கட்சியின் செயல் கமிட்டிக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

---

## நம்பிக்கையில்லா பிரேரணை

### உதவிமேயர்மீது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்கு மேயர் உட்பட எட்டு அங்கத்தவர்கள் கையொப்பமிட்டு முன்னறிவித்தல் கொடுத்திருப்பதாக அறியப்படுகிறது.

திருவாளர்கள் ஏ. நடராஜா, ஜே. எஸ். அழகையா, டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் (மேயர்), திரு. பி. எஸ். சோமசுந்தரம், என். டி. செல்லத்துரை, டி. எஸ். துரைராசா, பி எம். ஜோண். எஸ். இராசரத்தினம் ஆகியோர் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கை யொப்ப மிட்டி ருப்பதா கத் தெரிகிறது.

---

## ஹிந்தியில் கம்பராமாயணம்

பாட்ஞ, பெப். 24

கம்பராமாயணத்தின் ஹிந்தி மொழிபெயர்ப்புநூன்று, இன்று முன்னுள் ஜனுதிபதி டாக்டர் ராஜேந் திரப் பிர ஸாத் துக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

---

## போலந்தில் ஆர். கே. நேரு

வார்ஸா, பெப். 24

இந்திய வெளிவிவகாரக் காரியதரிசி ஆர். கே. நேரு இன்று போலந்து தலைநகர் வார்ஸாவுக்கு வந்துசேர்ந்தார்.

இப பததிரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேலை வீதி 63ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 25-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.